889

# ஜகன் மோகினி


ஆகஸ்ட் 1954

JAGAN MOHINI

ESTD. 1923

அணா நான்கு

4 SEP
889
3.24.
X
M211 A122 Jm
M54·31·8




தியாகமூர்த்தியின் நீடூழி ஞாபகச் சின்னத்திற்கு
சக்தியாநுஸாரம் அன்புக் காணிக்கை ஸமர்ப்பித்து
"காந்தி ஸ்தூபி"யை எழுப்ப உதவுங்கள்

# ஸ்ரீநாமஸங்கீர்த்தனம்

# பிரபந்தப் பண்ணிசை

ஸங்கீத ரத்னாகர

ஸ்ரீ அரியக்குடி ராமானுஜய்யங்கார்

மோகினிக்குச் சூட்டும் புகழ்மாலை

ஜகன்மோகினியில் வெளிவரும் ப்ரபந்தப் பண்ணிசைகளை நான் படித்துப் பார்த்துப் பரமசந்தோஷமடைகிறேன், ஸ்ரீமதி ஏ. ராஜம்மாள் திவ்யப்ரபந்த பாசுரங்களை நன்றாக அறிந்து அதன் அர்த்தபாவத்திற்கேற்ப ராகங்களை அமைத்து, வர்ணங்கள், கீர்த்தனங்கள், ராகமாலிகைகள் முதலிய உருப்படிகளைச் செய்திருப்பது நன்றாக இருக்கிறது. வர்ணங்கள் செய்வது மிகவும் ச்ரமம். இம்மாதிரி செய்வதில் திவ்ய ப்ரபந்தத்திற்குப் பெரிய கைங்கர்யம் செய்ததுபோலவும் ஆகிறது. சங்கீதத்துடன் ப்ரபந்தம் கலந்து ப்ரகாசிக்கவும் செய்கிறது.

இதை சங்கீதத்தில் பரிசயமுள்ள எல்லோரும், தொழிலாளிகள் உள்பட, பாடி இன்பமடைய வேண்டுமென்பது என்னுடைய ஆசை.

இந்த நன்முயற்சியை நான் பாராட்டுகிறேன்.

சென்னை
18—7—54

இப்படிக்கு,
Ariakudi Ramanuja Iyengar

பக்தியே
பாரததேவியின் உயிர்நிலை



# பகவத்விஷய ரஸாநுபவம்

[திருவாய்மொழிப் பொருளமுதவெள்ளம்.]

முதற் பதிகம் (முன் தொடர்ச்சி)

ஸ்ரீ காஞ்சீ மஹா வித்வான்
ப்ரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசார்ய ஸ்வாமி

பகவான் நற்குணங்களுக்கு இருப்பிடமானவன் என்கிற நூற்கொள்கையை நம்மாழ்வார் முதற்பாட்டின் முதலடியிலேயே திடப்படுத்துகிறார். இதனால், எம்பெருமான் தனது திருக்குணங்களைக் காட்டி ஆழ்வாரைவசப்படுத்திக்கொண்டனனென்பது விளங்கும். இங்கே நம் பூருவர்கள் ஓர் ஆராய்ச்சி செய்வதுண்டு; எம்பெருமானிடத்தில் திருக்குணங்களைக் கண்டு ஈடுபடுவது சிறந்ததா? அஃது அடியாகவல்லாமல் இயற்கையாகவே ஈடுபடுவது சிறந்ததா? என்று. என்ன முடிவு செய்தார்களென்னில், குணங்களைக் கண்டு ஈடுபடுவதிற் காட்டிலும் 'நமக்கு வாய்த்தவிடம்' என்று கொண்டு இயற்கையாகவே ஈடுபடுவதுதான் சிறந்ததென்று.

இங்ஙனே முடிவுகட்டுகைக்குக் காரணமென்னவெனில்; குணங்களைக் கண்டு ஈடுபடுவதென்று வைத்துக்கொண்டால் குணமில்லையென்று ஒருகால் மருண்டு நிற்கும்போது ஈடுபடாமல் நிற்க வேண்டிவரும். ஒருமனைவி தன் கணவனிடத்தில் ஈடுபடுவது 'இவன் நமக்கென்று வாய்த்த நாயகன்' என்கிற காரணத்தினாலே யல்லது அழகுடைமை அன்புடைமை அறிவுடைமை என்பன போன்ற குணங் காரணமாகவன்றே; அப்படிக் கொண்டால் அக்குணங்களில்லாதவிடத்து மனவேற்றுமை கொண்டிருக்க வேண்டி வருமன்றோ. அஃதேபோல எம்பெருமான் திறத்திலும் நாம் அடிமைப்படுவது இயல்வாகவேயொழிய அப்பெருமானிடத்துள்ள திருக்குணம்பற்றியல்ல வென்று ஸ்ரீவசன பூடணத்தில் இது பரக்கப பேசப்பட்டிருக்கின்றது. அப்படியிருக்க இங்கு ஆழ்வார் திருக்குணங்களுக்குத் தோற்றுத் தாம் ஈடுபட்டமையை முதலடியிற காட்டுகிறாரென்று சொல்லத்தகுமோ வென்று ஒரு சங்கை தோன்றும்.

கேண்மின்; ஆழ்வார் எம்பெருமான் திறத்தில் இயல்வாகவே தாம் ஈடுபட்டவர் என்பதைப் படவிடங்களிற காட்டியுள்ளார்; அவற்றுள் ஓரிடமே இங்குக் காட்டுகிறோம். மேலே (5-3-5) "கடியன் கொடியன் நெடியமால் உலகங்கொண்ட வடியன், அறிவருமேனி மாயத்தன், ஆகிலுங் கொடிய வென்னெஞ்சமவனென்றே கிடக்குமெல்லே!" என்பது ஒரு பாசுரம்.

எம்பெருமானிடத்து ஆழ்வார் தமக்குண்டான ஈடுபாடானது குணங்கண்டன்று, ஸ்வரூப ப்ரயுக்தமானதே என்பது இப் பாட்டில் நன்கு காட்டப்பட்டிருக்கின்றது. ஆழ்வார் தலைமகளான நிலையில் நின்று பேசுகிற பாசுரமிது; தோழியை நோக்கிச் சொல்லுகிறது. தோழியானவள் தலைமகளுக்கு எம்பெருமானிடத்து நிகழ்கின்ற அன்பைத் தணிக்கவேணுமென்று கருதி 'அம்மா! உனது அன்பிற்கு இலக்கான தலைவன் நற்குணம் வாய்ந்தவனாக இருந்தால் நீ நன்றாக அன்பு செலுத்தலாம்; அந்தோ அவன் குணசாலியல்லனே; குணஹீநனாயிற்றே; அவனிடத்து நீ காதல் கொள்ளத்தகுமோ?' என்றாளாம்; அது கேட்ட தலைவி 'எனது அன்பன் குணஹீநனல்லன், குணசாலியே' என்று நிரூபிக்க வேண்டியிருக்க, அதைவிட்டு 'தோழீ! எனது கணவன் குணஹீநனென்பதை நான் தெரிந்துகொண்டவளவு நீ தெரிந்துகொண்டாயல்லை; அவனது குணமின்மையை உன்னிலும் மிக அதிகமாகவே நான் தெரிந்துகொண்டிருக்கிறேன் காண்.

எம்பெருமானுக்குக் குணஹாநி சொல்லும்போதும் நான் சொல்லவேணுமேயல்லது நீ சொல்லலாகுமோ? அவனையும் என்னையும் கூட்டி வைத்தவளேயன்றோ உன் பணி; அவனோடு உள்கலந்து பரிமாறினவள் நானேயல்லது நீயல்லையே; அவனிடத்துள்ளது நன்மையோ தீமையோ எதுவானாலும் எனக்குத் தெரிந்தவளவு உனக்குத் தெரிய ப்ரஸக்தியில்லையே; ஆகையாலே குணக்கேடு தன்னையும் என் வாயால் நான் சொல்ல நீ கேளாய்' என்று பீடிகையிட்டுக்கொண்டு "கடியன் கொடியன் நெடியமால் உலகங்கொண்ட வடியன் அறிவருமேனி மாயத்தன்'! என்று இரண்டடிகளால் அவனது குணக்கேட்டைக் கூறினாள். இப்படிப் பட்ட குணக்கேடுகளைக் கோடிகணக்காகச் சொல்லவேணுமானாலும் நானன்றோ சொல்லவல்லேன்!

தோழீ! இவை உன்னாலும் சொல்லப்போகாது; இதற்கென்றே இட்டுப்பிறந்த சிசுபாலன்போல்வாராலும் சொல்லப்போகாது என்றாள். அது கேட்ட தோழியானவள் 'அம்மா! இப்படி அவனது குணக்கேடுகளை நன்கு அறிந்துவைத்தா அவனிடத்து நீ அன்பு பூண்டிருக்கின்றனை? பேதையோ நீ' என்றாளாம். அதற்குத் தலைவி சொல்லுகிறாள் "ஆகிலும் கொடிய வென்னெஞ்சம் அவனென்றே கிடக்குமெல்லே" என்று. "தோழீ! என்னுடைய நெஞ்சு உலகின்படியன்றே; லோகவிலக்ஷணமாயன்றோ எனது நெஞ்சிருப்பது. குணங்கண்டு பற்றுவதும் குணக்கேடு கண்டு கைவிடுவதும் நாட்டார்படியாயிருக்க, குணக்கேடுதானே பற்றுகைக்கு உறுப்பாகவன்றோ எனக்கிருப்பது" என்றாள். இங்ஙனே சொல்லுவதன் உட்கருத்து யாதெனில்; எம்பெருமானிடத்து குணக்கேடு இருப்பதாகச் சொல்லுகிறபடியன்று; குணங்கண்டு ஈடுபட்டமையில்லை, ஸ்வரூப ப்ராப்தமாகவே ஈடுபட்டனித்தினை—என்பதேயாம்.

இதுவே நூற்கொள்கையாயினும், திருவாய்மொழி தொடங்கும்போதே* உயர்வறவுயர் நலமுடையவன்* என்று குணமுடை

18318

மைகூறி, அக்குணங்களுக்குத் தோற்றுத் தாம் ஈடுபட்டதாகத் தெரிவிப்பதிலும் தவறு யாதுமில்லை. இயற்கையாகவே ஈடுபட்ட விடத்தில் குணமுடைமையும் கூடினால் பொற்றாமரைப்பூவிற்குப் பரிமளமும் பொலிந்ததாகுமன்றோ. ஸ்ரீராமாயணத்தில் [1] இளைய பெருமாள் [2] திருவடியோடே தம்மைப்பற்றிச் சொல்லிக்கொள்ளும் போது "அஹமஸ்யாவரோ ப்ராதா குணைர் தாஸ்யமுபாகத:" என்றார்; [3] பெருமாளுடைய திருவுள்ளத்தினால் நான் அவர்க்கு உடன்பிறந்தவனாகிறேன்; என்னுடைய கருத்தினால் குணங்கட்குத் தோற்று அவர்க்கு அடிமைப்பட்டவன்யான்—என்பது இதன்பொருள். குணங்களுக்குத் தோற்று ஈடுபடுவதனால் ஸ்வரூப ப்ரயுக்தமான அடிமைக்கு யாதொரு குறையும் வாராதென்க.

ஸ்ரீராமபிரானுடைய வநவாஸ ஸமயத்திலே சித்திரகூடம் கடந்தபிறகு அத்ரிபகவானுடைய ஆச்ரமத்தில் பெருமாள் எழுந்தருளி மாமுனிவரை அநுவர்த்தித்திருந்தபின்பு அம்முனிவரது தேவியான அநஸூயையை ஸீதாபிராட்டி அநுவர்த்தித்திருக்கிறவளவிலே அவ்வநஸூயையானவள் ஸீதையைநோக்கி 'உற்றாரையும் செல்வத்தையும்விட்டுப் பெருமாள் பின்னே காட்டுக்குவந்தது தைவயோகத்தாலே உமக்கு நன்றாகக் கூடிற்று; நகரத்திலிருக்கிலுமாம், காட்டிலிருக்கிலுமாம்; பெண்டிர்க்குத் தெய்வம் பர்த்தாவேகிடீர்; நீர் இப்படியே எப்போதும் பெருமாள் விஷயத்திலே அநுகூலித்திருக்கக்கடவீர்' என்று சொல்ல; ஸீதை வெட்கமடைந்து கவிழ்தலையிட்டிருந்து சொல்லுகிறாள்—

"மாமீ! எனக்குப் பெருமாளிடத்தில் அநுராகம் ஸ்வரூபமாகவே உண்டானதேயொழிய அவருடைய குணங்களைக் கண்டன்று; ஆனால் அவர் தாம் குணங்களிற் சிறந்தவராகையாலே என்னுடைய அநுராகத்திற்கு அக்குணங்களையே ஹேதுவாக நாட்டார் நினைப்பர்; எப்போதாவது அவர் குணஹீனராக இருப்பரானால் அப்போது 'என்னுடைய அநுராகத்திற்கு குணம் காரணமல்லவென்பதைப் பாருங்கள்' என்று நான் உண்மையையெடுத்துக் காட்டமுடியும். அப்படி ஒரு நொடிப்பொழுதும் காட்டமுடியாதபடி அவர் எப்போதும் குணக்கடலாகவே யிருப்பதால் நான் அவர் திறத்து இருக்குமிருப்பை உள்ளபடி நிரூபித்துக்காட்ட அவகாசம் பெறுகின்றிலேன்" என்று. இதனாலும், எம்பெருமான் திறத்து அடிமைபுகுவது ஸ்வரூப ப்ராப்தமென்றும், ஆனாலும் திருக்கல்யாண குணங்கள் அப்பெருமானோடு நித்யஸம்பந்தம் பெற்றிருக்கையாலே அவ்வடிமை குணப்ரயுக்தமாகவும் தேறுகிறதென்றும் அறிகிறோம்.

பாசுரத்தில் "நலமுடையவன்" என்றுள்ளது. குணங்களுக்கு நலமென்று பெயரிட்டபடி. எம்பெருமானிடத்து விளங்குகின்ற குணம் எதுவானாலும் அது நலமாகத்தானிருக்குமென்று கொள்க. உலகில் சிலவற்றை நற்குணமென்று நாம் வழங்குகிறோமல்லவா, அஃது எதனாலென்னில், எம்பெருமானிடத்தில் குணமென்று காணப்பட்டதனாலேயே என்க. உலகில் ஒருவனுக்கு ஏற்றம் சொல்லவேண்டுமாகில் குணமுடைமையைக் கொண்டு ஏற்றம்

1 இளையபெருமாள்—லக்ஷ்மணன். 2 திருவடி—அநுமன். 3 பெருமாள்—ஸ்ரீராமபிரான்.

சொல்லவேண்டும்; எம்பெருமானிடத்திலோ வென்னில் அங்ஙனமன்று; எம்பெருமானிடத்திலிருப்பதனாலே குணங்களுக்கு ஏற்றம்!

இக்குணங்களுள் ஒரு குணத்தைப்பற்றி தைத்திரீய உபநிஷத்து (ஆனந்தவல்லி யென்னுமொரு பகுதியில்) சொல்லப் புகுந்து அது படுகிறபாடு மிக வியக்கத்தக்கது; அதைப்பற்றி இங்குச் சிறிது பேசுவோம்; எம்பெருமானது ஆனந்தமென்கிற ஒரு குணத்தை மாத்திரம் வருணிக்க இழிந்த அவ்வுபநிஷத்தானது "யுவா ஸ்யாத் ஸாது யுவாத்யாயக:" என்று தொடங்கி ஒரு கல்பனை பண்ணிக்கொண்டு செல்லுகின்றது; (அதாவது) ஒரு மநுஷ்யன்; அவன் நல்ல யௌவனபருவத்திலுள்ளவன்; ஸகல சாஸ்த்ரங்களையும் ஒன்றுவிடாமல் ஓதிப் பிறர்க்கும் ஓதுவிப்பவன்; சோர்வு சோம்பலின்றி எல்லாக் காரியங்களையும் வழுவாமற் செய்பவன்; தேஹத்திலும் மனத்திலும் திடமுள்ளவன்; இவ்வளவும் வாய்ந்தாலும் தரித்ரனாயிருந்தாற் பயனில்லையே; அப்படியன்றிச் செல்வமெல்லாம் நிறைந்த பூமண்டலம் முழுவதையும் செங்கோல் செலுத்தியாளும்படியான ஒப்புயர்வற்ற விபவமும் வாய்ந்தவன்; இப்படிப்பட்ட அதிசயங்கள் ஒரு மனிதனுக்கு மல்கியிருந்தால் அவனுக்கு உண்டாகக்கூடிய ஆனந்தத்தை முன்னேயெடுத்துக் காட்டி, அதைவிட நூறுபங்கு அதிகமான ஆனந்தமுடையவர்களாக மநுஷ்ய கந்தருவர்களென்ற வகுப்பைக்கூறி, அவர்களைவிட நூறுபங்கு அதிகமான ஆனந்தமுடையவர்களாக தேவகந்தருவர்களைக் கூறி இப்படியே நூறு நூறு மடங்கு அதிகமான ஆனந்தமுள்ளவர்களாகப் பல வகுப்பினரைச் சொல்லிக்கொண்டு சென்று முடிவிலே பிரமனைச் சொல்லி, அவனுடைய ஆனந்தத்தைவிட நூறுபங்கு அதிகமான ஆனந்தமுடையது பரப்ரஹ்மம் என்று சொல்லப்பார்த்து 'பரப்ரஹ்மத்தின் ஆனந்தத்தை இவ்வளவு மட்டமாகவா சொல்லிவிடுகிறது' என்று குறைபட்டு "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்றபடி மறுபடியும் கீழ்நோக்கித் திரும்புகிறது.

(அதாவது) கீழே சொல்லிக்கொண்டுவந்த [மனிதர் தொடங்கிப் பிரமனளவான] வரிசையில் கடையான ஸ்தானத்தில் நிறுத்தப்பட்ட பிரமனை மனிதனுடைய ஸ்தானத்திலேயாக்கி அங்கிருந்து ஆனந்தத்தை நூறு மடங்காகப் பெருக்கிக்கொண்டு வந்து பழையபடியே பிரமனளவும் கூறிவந்து, அந்தப் பிரமனுடைய ஆனந்தத்தைவிட நூறுமடங்கு மேம்பட்ட ஆனந்தமுடையது பரப்ரஹ்மம் என்று சொல்லப்பார்த்து, அதிலும் பொருத்தம் காணாது, மீண்டும் முன்போலவே கீழ்நோக்கித் திரும்புகிறதாம்.

இப்படி இற்றைக்கும் நிகழ்ந்துகொண்டிருக்கிறதென்றும், அந்த ஆனந்த குணத்தை எல்லை கண்டுமுடித்து முற்றுப் புள்ளியிட்டபாடில்லை யென்றும் ஆளவந்தார் கூரத்தாழ்வான் பட்டர் முதலான பேராசிரியர்கள் உபநிஷத்தின் கருத்தை உள்ளபடியுணர்ந்து உரைத்தருளியிருக்கின்றார்கள். ஆனந்த குணமொன்றைப்பற்றி இங்ஙனம் கூறியதானது மற்றுமுள்ள எல்லாக் குணங்களுக்கும் உபலக்ஷணம் என்று மருளிச் செய்திருக்கிறார்கள்.

ஆக, அப்படிப்பட்ட ஒப்புயர்வில்லாத அனந்த கல்யாண குணங்களையுடையனை எம்பெருமானை ஆழ்வார் "உயர்வற வுயர்நலமுடையவன்" என்று சுருக்கமான சொற்றொடரால் குறிப்பிட்டது சிறந்த சாதுரியம்.

இனி, இரண்டாமடியிற் சென்று அநுபவிப்போம். "மயர்வற மதிநல மருளினன்" என்பதனால்—முதலடியிலே பொதுப்படக் குறிப்பிடப்பட்ட திருக்குணங்களிலே சிறந்ததோர் திருக்குணம் இங்குக் கூறப்படுகின்றது. அதாவது அருள் என்பது. உலகமெல்லாம் எம்பெருமானது அருளையே எதிர்பார்த்திருக்கின்றது. ஆனால் உலகர்களின் வாஞ்சை பலவகைப்பட்டதாதலால் ஒவ்வொருவர் ஒவ்வொன்றை விரும்பி அதற்குரிய அருளைப் பெறுவர். விரும்பப்படும் பொருள்களுள் ஞானமும் பக்தியுமே மிகச் சிறந்தனவாகும். இவையிரண்டனுள் ஏதேனுமொன்று வாய்த்தாலும் அதுவே ஸ்வயம் ஆனந்தரூபம்; அதற்கு மேற்பட்ட ஆனந்தமேகிடையாது. அப்படிப்பட்ட மிகவுயர்ந்த பொருளை எம்பெருமான் தனது அந்தரங்க பக்தர்களுக்கே அருள் செய்யுமியல்பினனாதலால் அத்தகைய பக்தர்களுள் தலைவரான நம்மாழ்வார்க்கு அதை அருள் செய்தானாயிற்று.

[மயர்வு அற மதிநலம் அருளினன்] மயர்வு என்று அஜ்ஞானத்திற்குப் பெயர். அஜ்ஞானத்தில் நான்கு வகைகள் உண்டு. 1. ஒரு விஷயத்தைப்பற்றி அடியோடு ஞானமே உண்டாகாமை. 2. ஞானமுண்டாகி அது நிச்சயரூபமாகவல்லாமல் ஸந்தேஹரூபமாக இருத்தல். 3. ஸந்தேஹரூபமாகவுமல்லாமல் விபரீதமாகவேயிருத்தல். 4. உண்டான ஞானம் மறைந்து போதலாகிற மறப்பு. ஆக இந்நான்கும் அஜ்ஞானத்தின் வகைகள்.

இவற்றுக்கு ஓர் உதாரணம் காட்டுவோம். லவணம் என்கிற சொல்லை ஒருவன் கேட்டிருந்தான்; ஆனால் அதன் பொருளை அவனறியான்; அதன்பொருள் இன்னதென்றே தெரிந்துகொள்ளப் பெறாத நிலைமை முதல்வகை. ஒருவன் அச்சொல்லின் பொருளைக் கேட்டிருந்தான்; ஆனால் நிச்சயமான அறிவு இல்லை; லவணமென்றால் உப்போ பருப்போ! என்று ஐயுற்றிருக்கின்றான்; அந்த நிலைமை இரண்டாம்வகை. ஒருவன், லவணமென்றால் கடுகு என்று விபரீத நிச்சயத்தோடிருக்கிறான். அந்த நிலைமை மூன்றாம் வகை. ஒருவன், ஸந்தேஹமோ விபரீத நிச்சயமோ எதுவுமின்றி முன்பு க்ரஹித்திருந்த பொருளை அறவே மறந்தொழிகிறான்; அந்த நிலைமை நான்காம்வகை. ஆக இந்நான்கு விதமான அஜ்ஞானமும் தொடராதபடி ஆழ்வார்க்கு எம்பெருமானுடைய அருள் வாய்த்ததென்க.

'மதிநலம்' என்றவிடத்து 'மதியையும் நலத்தையும்' என்று இரண்டாகக் கொண்டு உரை செய்வர் சில ஆசிரியர்கள்; ஞானத்தையும் பக்தியையும் அருள் செய்தானென்றதாகும். இப்படியல்லாமல், மதிநலம் என்பதை (நலம்மதி) என மொழிமாற்றி, பக்தியாகவுருக்கொண்ட ஞானத்தையருளினன் என்பாருமுளர். இப்போது, ஞானம் வேறு, பக்திவேறு என இரண்டல்லாமல் ஞானமுண்டாகும்போதே அது பக்திரூபமாகவே உண்டானதாகச் சொல்லுகிறது. சில பொருள்கள் முளைக்கும்போதே வயிரம்பற்றி

முளைப்பதுண்டே; அதுபோல உணர்வு முளைக்கும்போதே பக்தி யின் வடிவாக முளைப்பது எம்பெருமானது சிறந்த அருளின் காரியமாகும்.

இன்னார்க்கு அருளினன் என்று சொல்லப்படவில்லை யிங்கு. மேலே (1—7—4.) "மயர்வற என் மனத்தே மன்னினான் தன்னை" என்றருளிச்செய்திருப்பதற்குச் சேர ஆழ்வார் தமக்கு அருளினதாகச் சொல்லுவதுதான் ஏற்கும். அப்படியானால் 'எனக்கருளினன்' என்று ஏன் கூறவில்லையென்று கேள்விவரும். இதற்கு ஆசாரியர்கள் கூறுவதாவது, எம்பெருமானுடைய அருளைப் பெறுவதற்கு முன்பு தாமுளராக நினைத்திலாதவராத லால் [தம்மைக் கண்டிலராதலால்] எனக்கு என்று கூறிற்றிலர் என்று.

உலகில் உதாரர்களிடத்து யாசகர் வந்து பலகால் இரக்க அருள் செய்வதுமுண்டு; ஆழ்வார்க்கு எம்பெருமான் அருள் செய்தது அப்படியோ? என்னில்; இங்கு அருளுக்கு ஒரு ஹேது வும் சொல்லாமையாலே, தம் தலையில் நினைவின்றியேயிருக்க எம் பெருமான் தானே வந்து தன் பேறாக அருள் செய்தானென்னு மிடம் தெரிவிக்கப்பட்டதாகிறது. யாசகருடைய வேண்டு கோளுக்கோ நிர்ப்பந்தத்திற்கோ உட்பட்டுக் கொடுப்பதானது அருள் செய்ததாகாது. எதிர்த்தலையில் அபேக்ஷையின்றியே யிருக்கக் கொடுத்தமை சொல்லிற்றாயிற்று.

இங்ஙனம் தானாகவேவந்து வந்து அருளினவன் தன்னருள் கொள்வாரில்லாதவொருவனோவென்ன, அப்படிப்பட்டவனல்லன், நித்யஸூரிகளும் முக்தர்களுமான பெருந்திரளை ஒரு நாடாக வுடையவன் என்கிறது மூன்றாமடி [அயர்வறுமமரர்களதிபதி] என்று. 'மயர்வு' என்றதற்குச் சொன்ன பொருள் 'அயர்வு' என்கிற விதற்கும் ஏற்கும். சுவர்க்கத்திலுள்ள இந்திரன் முதலானார்க்கும் அமரர்களென்னும் பெயர் உண்டானாலும் இங்கு அவர்கள் கொள்ளப்படுவதற்குத் தகுதியில்லை; 'அயர்வு அறும்' என்கிற அடைமொழி (விசேஷணம்) அவர்களுக்கு இணங்காதன்றோ. ஆகவே, ஸ்ரீவைகுண்டமென்கிற திருநாட்டிலுள்ள நித்யஸூரி களையும் முக்தாத்மாக்களையுமே இங்குக் கொள்ளவேணும். நித்ய ஸூரிகள் பக்கலிலே அயர்வின்ஸம்பந்தம் ஒரு நாளுங் கிடையாது. ஏனெனில், ஸம்ஸார நிலத்தில் ஒருபோதும் காலிடாதவர்களான ஸேநாபதியாழ்வான் திருவனந்தாழ்வான் கருடாழ்வான் முதலா னவர்களே நித்யஸூரிகளெனப்படுதலால் அன்னவர்களுக்கு அஜ்ஞானத்தின் ஸம்பந்தகந்தமும் இருக்கத் தகுதியில்லையன்றோ. இனி, ஸம்ஸார நிலத்தில் பலகால் பிறப்பது மிறப்பதுமாயிருந்து பகவத் பாகவத ஆசார்யகடாக்ஷ விசேஷங்களாலே அந்த மாயப் பற்று அற்றுத் திருநாடு புகுந்தவர்களே முக்தர்களெனப் படுதலால் அவர்களுக்கு என்றைக்குமே அஜ்ஞானமில்லை யென்னப் போகாது; அஃது இருந்து கழிந்தவர்கள் என்னும் பொருளில் அவர்களை மயர்வற்றவர்களென்கிறது. ஆக, அயர்வின் தொடர்பு ஒருபோது மில்லாதவர்களும் அது இருந்து கழிந்தவர் களுமான நித்ய முக்தர்களை ஒரு நாடாகவுடைய எம்பெருமான் தன்னருள் கொள்வாரில்லாதவன்போல வந்து தமக்கருள்

செய்தானென்று சிறந்ததொரு குணவிசேஷத்தைக் கூறினாராயிற்று.

"ஏகமேவ அத்விதீயம்'' என்ற உபநிடத வாக்கியத்திற்குப் பொருள் கூறுகின்ற சிலர் 'ஈச்வரனொருவனேயுளன், வேறு தத்துவங்கள் கிடையா' என்பர்; அப்பொருள் ஆழ்வார்க்கு அபிமதமன்று; ஈச்வரன் போலவே சேதநப் பொருள்களும் அசேதநப் பொருள்களுமெல்லாம் ஸத்யமாகவுண்டு; ஈச்வரன் உபயவிபூதிநாதன் —என்பதே ஆழ்வாருடைய கொள்கையாதலால், அதற்குச்சேர 'அயர்வறுமமரர்களதிபதி' என்றார்.

இப்படிப்பட்ட எம்பெருமானுடைய திருவடிகளே தமக்குத் தஞ்சமென்பதை ஈற்றடியாற்கூறித் தலைக்கட்டுகின்றார். எம்பெருமானுடைய திவ்வியமான அவயவங்கள் எல்லாமுமே நமக்கு உத்தேச்யமாயினும் திருவடிதான் மிகவும் உத்தேச்யமாகும். அப்போது பிறந்த குழந்தை தாயினுடைய அவயவங்களெல்லாங் கிடக்க மார்பிலே வாய் வைக்குமியல்வை எங்குங்காணுகின்றோம். அவ்வவயவந்தான் தனக்கு ஜீவனாதாரமென்பதை ஜன்மாந்தர வாஸனையினால் குழந்தை அறிந்துள்ளது. அதுபோலவே பக்தர்களும் தங்களுக்கு உஜ்ஜீவநாதாரம் எம்பெருமானது திருவடியேயென்று உணர்வர்கள்.

ஒரு காரியத்தின் பொருட்டுக் கையைப் பிடித்துக் கொண்டு வேண்டிக்கொண்டால் கையையுதறிவிட்டுப் போகவுங் கூடும்; காலைப் பிடித்துக்கொண்டால் கடுநெஞ்சினனுக்கும் கடக்க முடியாததாயிருக்குமென்று இதனை லோகாநுபவத்திலுங்காணலாம். "சுடரடி'' யென்றது தேசுபொலிந்த திருவடியென்றவாறு. தன்னைப் பற்றினாரை ஒருகாலும் கைவிடாதிருத்தலே திருவடிக்குத் தேசாகும்.

''துயரறு'' என்னுமடைமொழி அடிக்கு இடப்பட்டிருக்கின்றது; இதற்கு இரண்டு வகையாகப் பொருள் கூறுவர். அடியார்களது துயரையறுக்கும் திருவடி என்பது யாவரும் எளிதிலுணரத்தக்க பொருள். இராமாநுசர் என்கிற எம்பெருமானார் 'பிறருடைய துயரையறுக்கின்ற திருவடி என்று கொள்வதிற் காட்டிலும் தன துயர் அறப்பெறுகின்ற திருவடி என்கிற பொருள் சிறக்கும்' என்று அருளிச் செய்வர். இதன் உட்கருத்து யாதெனில், அடியார்கள் துயருற்றிருக்கும்போது எம்பெருமான் தானும் துயருற்றிருப்பன்; அடியார் துயரற்றவாறே தான் துயரற்றவனாவன் எம்பெருமான். இது கருணையென்னுங் குணத்தின் வழியாக ஏற்பட்டதாகும். எம்பெருமானுடைய இப பெருங்குணத்தைத் திருவடியின் மேலிட்டுக் கூறினது உபசாரவழக்கு.

ஸ்ரீராமாயணத்தில், இராமபிரான் விபீஷணாழ்வானுக்கு முடிசூட்டி மகிழ்ந்தானென்பதைச் சொல்லுமிடத்து வான்மீகி முனிவர் "அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம், க்ருதக்ருத்யஸ் ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ:'' என்றார். இதில் 'விஜ்வர:' என்றது உயிராகக் குறிக்கொள்ளத்தக்கது; விபீடணன் துயர்தீர்ந்ததாகச் சொல்லாது, இராமன் தன் துயர் தீர்ந்ததாகச் சொல்லிற்று.

(தொடரும்.)

மாயாமாளவ

**9.** லகு

த த த த — த த த த — தா த த — தா தா
உ டு த் து — க்களைந்தவின் — பீதக — வாடை
ம ம ம ம — மா மா — க ம ப ம — க ரி ஸ நி
தொ டு த் த — து . ழாய் — மலர் சூடி — க்களைந்தன
த த த த — த ம த த — ஸ் ஸ் நி நி — ஸ் ரி ஸ் ா
வி டு த் த — தி . சைக் — கருமந் — திருத்தி
ஸ் ஸ் ஸ் ஸ் — நி ஸ் நி த — த ப ப த — ப த ப ம
ப டு த் த — பைந்நாகணை — பள்ளிகொண் -- டானுக்குப்

**10.** முக

ம க ரி ரி — ம ம ம ம — ம நி த த — ஸ் ஸ் ஸ் ஸ்
எ ந் . நா — ளெம்பெரு — மானுன் — றனக்கு .
ரி ம ப நி — த ப ப ப — ரி ம ப ம — க ரி க ஸ
அ ந் நா . — ளே . அடி — யோங் . க — ளடிக்குடில்
ஸ் நி த த — ஸ் ஸ் ஸ் ஸ் — ரி ரி ரி ரி — ரி க ரி ரி
செ ந் நா ள் — தோற்றித் — திருமது — ரையுட்
ஸ் நி நி த — த க ரி ரி — ஸ நி ஸ் நி — த த பா
பைன் நா . — கத்த . — லைப் . பாய் — ந்தவனே

**11.** பல

ரீ ரி ம — க ஸ ஸா — நீ த த — ஸா ஸ ஸ
அல் வ . — ழுக்கொன் — றுமில் — . லா . வணி
பா ப த — ஸ்ா ஸ்ா — தா த ஸ — த ப பா
செல்வனைப் — போலத் — தி . ரு . — மாலே
ரீ ரி ரி — மா ம ம — நி நி த த — ஸ்ா ஸ்ா
ந ல் வ கை — யால் நமோ — நாரா — ய . ண .
பா ப த — ஸா ஸா — த த த ஸ — த ப பா
ப ல் வ கை — யாலும் — பவித்தி — ர , னே

**12.** மத்ய

ஸ்ரீ ரி மா — ம ம ம ம — ரி பா ம — பா பா
ப ல் லா ண் — . டென்று — பவித்தி — ர . னைப்
ப ப ப ரி — ரி ஸ் ஸ் ரி — ரி நி நி ஸ் — நி ப ப நி
வில்லாண் — டான்றன்னை — வில்லி — புத்தூர்
ரீ ரி ரி — ரி ரீ ரி — ஸ ரீ ம — ரீ ஸா
ந ல் லா — ண்டென்று — நவின்று — ரைப்பார்
ரி ஸ் ஸா — ஸ் ரி ரி நி — நி ஸ் ஸ் நி — ப ம ப நி
ப ல் லா ண் — : டு ம் — பரமா — த்ம ; னைச்

# பல்லாண்டு

ஏ. ராஜம்மாள்

தாளம்: ஆதி

கௌள

த்ரு | த்ரு

த ப பா — ப ப த ப | ம ம க ம — பா பா ||
உடுத்து — . . க்க . | ல . த்த . — துன்டு . ||
ஸ ரி ம க — ரி ரி ம ம | ம ம ம ம — ப ம கா ||
சூ . டு . — . . மித் | தொண்டர்க — ளோம் ||
ஸ் ரி ஸ் ஸ் — ஸ் ஸ் ஸ் ஸ் | நி ஸ நி த — நி நி நி நி ||
திருவோ . — . . ணத் | திருவி . — ழ . வில் ||
க க க ம — ப த ப ம | க க ம ம — க ரி ஸ ஸ ||
பல் லா — . ண்டு . | கூ . று . — து . மே . ||

ரீ

நி நி ஸ ரி — ஸ நி நி த | த ப ப ப — ப ப ப ப ||
அ டு யோ — . . மென் | றெழுத்து — ப்ப . ட்ட . ||
ரி ம ம ப — ப ப ப ம | ம நி த த — த ப ப ப ||
வீடு . — பெற் | றுய்ந்த — து . காண் ||
ஸ் ரி ரி ம — க ரி ரி ஸ் | ஸ் நி நி த — ஸ்ஸ்ஸ்ஸ் ||
சிலை . கு — னித்தை . | . ந்த . — லை . ய . ||
ரி ம ம ப — நி த த ப | ம ம ம ப — ம க ரி ஸ ||
யுன்னைப் . — பல்லாண்டு | கூ . று — து . மே . ||

ஹம்ஸ

ரி ம ரி ம — பா பா | ப ப ப நி — த ம மா ||
கோ . ட்டி — யர்கோன் | அபிமான — துங்கன் ||
மா பா — த ஸ பா | ம க ரி க — ஸா ஸா ||
நா னு — முனக்குப் | ப ழ வ டி — யேன் ||
ஸ்ா ரீ — ரி ப ம க | ரி ரி ரி க — க ஸ ஸா ||
வென்று — நாமம் | ப ல ப ர — வி . . . ||
மா பா — த பா ம | ரீ ரி க — ஸா ஸா ||
யுன்னைப் — பல்லாண்டு | கூ று வ — னே . . ||

மாவதி

ப ப நி நி — ப ம மா | ப ஸ்ா நி — ஸ்ா ஸ்ா ||
பரமே . . — ட்டி . யை | சா ர் ங் க — மென்னும் ||
ப ம ப நி — ஸ் நி ப ப | ரி ரி ரி ம — ரி ஸ ஸா ||
விட் டு . — சித்தன் | வி ரு ம்பிய — சொல் - . ||
நி ஸ நி — பா ப ம | ப ஸ்ா நி — ஸ்ா ஸ்ா ||
நமோ . . — நாரா | ய ணா ய — வென்று . ||
ஸ் ரி நி ஸ் — ப நி ம ப | ரீ ரி ம — ரி ஸ ஸா ||
சூழ்ந்திரு — ந்தே . த்துவர் | பல் லா — ண்டே . . . ||

# காவிதாசர் கனவு

## 5. விக்கிரம பராக்கிரமம்

(கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

"இறைவன் அருளில் உண்மை நம்பிக்கையும், பக்தியும் உள்ள எனக்கு, என் உயிரை நானே மாய்த்துக்கொள்ளும் அதர்ம வழியில் மனம் செல்லவில்லை. சந்திரகலையின் பிரிவு தாங்கமுடியாத வேதனையைக் கொடுத்தபோதிலும், தேவியின் கட்டளைப்படியே நடக்கட்டுமென்று பொறுமையாக இருந்தேன்.

என் சந்திரகலையை மறைமுகமாக வர்ணிப்பதிலும், கலையின் சேவையிலும், நாட்டின் சேவையிலும், நம்முடைய நாகரீகப் பாதுகாப்பிலும் என்னுடைய காலத்தைக் கழிக்க விரும்பினேன்.

என்னுடைய காலத்தில் மகாவீரர்களானவர்களும், தர்ம ஸ்வரூபிகளும், கலாரசிகர்களுமான அரசர்கள் நமது பாரத நாட்டில் விளங்கினர். அக்னிமித்திர மகாராஜாவின் புகழ் நாடெங்கும் பரவியிருந்தது. அப்பொழுது நான் சிறுவனாக இருந்தேன். அவருடைய புகழை "மாலவிகாக்னிமித்ரம்" என்ற நாடகத்தில் பிறகு அமைத்தேன்.

> "ஆசாஸ்யமீதிவிகமப்ரக்ருதி ப்ராஜானும்
> ஸம்பத்ஸ்யதே நகலுகோப்தரி நாக்னிமித்ரே |"

(அக்கினி மித்திரன் அரசாங்கத்தில் கேடுகள் இன்றி குடிகள் வாழவேண்டும் என்று கூறவும் வேண்டுமோ?)

ஆனால் நான்கண்டுகளித்துக்கொண்டாடின அரசர்களுக்குள் உஜ்ஜயினியில் அரசாட்சி செய்து, என்னை ஆஸ்தான கவியாக்கி ஆதரித்த விக்ரமாதித்ய அரசனைப்போல் நான் ஒரு அரசனையும் கண்டதில்லை. ராம ராஜ்யம், தர்மபுத்திர ராஜ்யம், அசோக ராஜ்யம்—இவைகள் எவ்வளவு உயர்ந்தவைகளோ, அவ்வளவு உயர்வுடன் கூடியது விக்கிரம ராஜ்யம். விக்ரமாதித்ய அரசர் அவர் காலத்தில் பாரததேசத்தினமேல் படையெடுத்துவந்த சகர்களை முறியடித்து நம் தேசத்தையும், நாகரீகத்தையும், தர்மத்தையும் காப்பாற்றினார். அவர் சாரி என்ற பெயரைப் பூண்டார். அவருடைய காலத்திற்கு அவருடைய பெயரையே வைத்து ஜனங்கள் கொண்டாடினார்கள். அதிலிருந்துதான் "விக்கிரம சகாப்தம்" என்று ஏற்பட்டது.

என்னிடம் அவருக்கு ஏற்பட்ட அன்பிற்கு அளவேயில்லை. அவர் என்னைச் சிறந்த கலாரத்தினமாகக் கருதினார். முப்பத்திரண்டு படிகளிலும் ஒவ்வொரு தங்கப்பதுமையுடன் கூடின தெய்விகச் சிங்காசனத்தில் வீற்றிருந்து அவர் கொலுவிருக்கும்

தருணத்தில், நான் அவருடைய வலது பக்கத்தில் உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்திருந்தால்தான், அவருக்கு உண்மையான ஆனந்தம் ஏற்படும்.

அவர் என் துயரத்தைக் கேட்டு எனக்கு மிக்க ஆறுதல் கூறினார். "கவியரசே! நீர் அம்மாதரசியுடன் வெகுகாலம் இன்பமாக வாழும் புண்ணியத்தைச் செய்யவில்லை. அத்தகைய துயரத்தைத் தீர்ப்பது இந்தப் பிறப்பில் முடியாத காரியம். உங்களுடைய வாழ்க்கையின் இறுதியில் தேவி அருள் செய்து பிரிந்திருக்கும் உங்கள் இருவரையும் சேர்த்து வைப்பாள். அக்காலம் வரையில் நீங்கள் கலையின் பணியிலேயே ஈடுபட்டிருந்தால் அது உங்கள் இதயராணிக்கும் உகந்தவேலையாக இருக்கும். நாட்டிற்கு மேன்மையும் உண்டாகும். வால்மீகிமுனிவருக்கும், வியாசமுனிவருக்கும் பிறகு உங்களைப்போன்ற மகாகவி தோன்றவில்லை. அவர்களுடன் கூட நீங்களும் சேர்ந்து காவ்ய உலகத்திற்கு த்ரிமூர்த்திகளாக விளங்குவீர்களென்று என்னுடைய திடமான எண்ணம். நீங்கள் உத்தம காவ்யங்கள் இயற்றுவதிலேயே உங்களுடைய கவனத்தைச் செலுத்தவேண்டும் என்று வேண்டுகிறேன்." என்று பணிவாகக் கூறினார்.

அவர் சொன்னபடியே நடப்பதுதான் உசிதம் என நான் உறுதிசெய்துகொண்டேன். என் அன்புதேவியின் கட்டளையும் அதுவே என்று என் உள்ளுணர்ச்சி கூறியது. விக்ரமாதித்யருடைய திவ்ய சரித்திரத்தை நான் கூறத்தொடங்கினால் அது மிகவும் விரிவுள்ளதாகும். அந்தப் பணியைச் செய்ய நான் மிகுந்த ஆவல் கொண்டிருந்தேன். ஆனால் என் எண்ணம் ஈடேறவில்லை. என்னுடைய தேகத்தின் தற்கால நிலையில் அது இயலாத காரியம். நீ கேட்டுக்கொண்டபடி என்னுடைய நூல்களின் ரசங்களையும், லக்ஷியங்களையும் சுருக்கமாகக்கூறி முடித்துவிடுகிறேன்.

விக்கிரம அரசர், நாட்டில் ஆறுமாதமும் காட்டில் ஆறுமாதமுமாக வாழ்ந்ததால், எனக்கு அவருடன் கூடச்சென்று இயற்கையழகுகளைக் கண்டனுபவிக்கவும் அனேக நாடுகளைக் காணும் பாக்கியத்தை அனுபவிக்கவும் நேர்ந்தது. விக்கிரம அரசரைப்பற்றி என்னுடைய காவ்யங்களில் மறைமுகமாக அனேக உண்மைகளையும், சம்பவங்களையும் கூறியிருக்கிறேன்.

முக்கியமாக விக்ரமோர்வசீயம் என்ற நாடகத்தில் அவருடைய வீரத்தையும், ரசிகத்தன்மையையும், உணர்த்தி, அவருக்குக் கலாதேவியிடம் உள்ள அன்பையும் காட்டி, அவருடைய பெயரை நாடகத்தில் புனைந்திருக்கிறேன். அவருடைய கர்வமற்ற சமரச சுபாவம் அவருடைய வீரம் எப்படி அதி அற்புதமானதோ, அப்படியே அற்புதமானது. அந்த நாடகத்தில் முதல் அங்கத்திலேயே "அனுத்ஸேக: கலு விக்ரமாலங்கார:" என்று மறைபொருளாகக் கூறியிருக்கின்றேன். அந்த உத்தமனுடைய அன்பால் என்னுடைய பட்டமரம்போன்ற மனம் துளிர்த்து மறுமலர்ச்சியை ஒருவகையாக அடைந்தது. அவருடைய அன்பு என் காதலியின் அன்புபோல் என்னுடைய காவ்ய நாடகங்களுக்கு மூலகாரணமாக ஏற்பட்டது.

(தொடரும்)

# வாழ்க்கை தீபம்

வை. மு. கோ.

ஸௌபாக்யவதி லக்ஷ்மிக்கு மங்களமுண்டாகுக. உபயகுசலம். உன் கடிதம் கண்டு சந்தோஷமடைந்தேன். உன்னுடைய நாத்தனார்கூட பெரிய மனது செய்து வரதட்சிணை வாங்காமல் கல்யாணம் செய்யத் துணிந்துவிட்டதற்காக நான் கணக்கற்ற மகிழ்ச்சியை அடைகிறேன். என சந்தோஷத்தை அவருக்குச் சொல்லு. இதையே பின்பற்றி இன்னும் சில தாய்மார்கள் நடந்தால் நம் நாடு அதிவிரைவில் க்ஷேமமடையும்.

தவிர, அசோகஸ்தூபி உலக சரித்திரத்தில் ப்ரதான இடம் பெற்று ப்ரகாசிப்பதேபோல் நம் பாரத நாட்டின் ஜோதியாய் உலக முள்ளளவும் ப்ரகாசிக்கும்படி மகாத்மா காந்தியின் ஞாபகார்த்த ஸ்தூபியும் மணிமண்டபமும்கட்ட ஏற்பாடு செய்திருக்கும் விஷயம் உனக்கு நன்றாகத் தெரியும்....அதற்கு என் கணவர் 10 ரூபாய் நன்கொடை கொடுத்தார். நீ என்ன கொடுத்தாய்...என்று கேட்டு எழுதியிருக்கிறாய். அதை நான் மிகமிக மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். ராமாயணத்தின் ஸாரம் கங்கா ப்ரவாகம் போன்று மிகப் பெரிதாக இருப்பினும் அணில்பிள்ளை மணலை உதிர்த்ததற்குள்ள பெருமையும் மகிமையும் வேறு எதற்காவது இருக்கிறதா? உடத பக்தி என்கிற பதத்தை உபயோகித்து ஸ்ரீ த்யாகய்யர்வாள் கீர்த்தனைகளைச் செய்திருக்கிறார். ஆழ்வார்கள்.

> "குரங்குகள் மலையை நூக்கக்
> குளித்துத்தாம் புரண்டிட்டோடி,
> தரங்க நீரடைக்க லுற்ற
> சலமிலா அணிலம் போலேன்"

என்று அணிலைப் பாடியிருக்கிறார். மலைமலையாகத் தூக்கி அணை கட்டியிருக்கும் வீரர்களைவிட மணலை உதிர்த்த அணில்போல் நாங்களும் ஒரு சிறிது கடமையைச் செய்தோம். நமது மகாத்மாஜீ ஸேவா சங்கத்தின் சில அங்கத்தினர்கள் சேர்ந்து 101. ரூபாய் சின்ன தொகையை பாரதநாட்டின் தவப்புதல்வரான ராஜாஜியிடம் கொடுத்து மகிழ்ந்தோம். அதில் ஏதோ என் சக்தியையும் பக்தியையும் காட்டினேன். இத்தகைய திருப்பணிக்கு— அதிலும் ப்ரத்யேகமாய் மகாத்மாவின் ஞாபகார்த்தமான ஸேவைக்குப் பாடுபடுவதற்கு — இந்தியாமட்டுமல்ல— உலகமே —கடமைப்பட்டிருக்கிறது என்றால் மிகையாகாது.

பூசலார் நாயனார் தமது இதயத்திலேயே ப்ரம்மாண்டமான கோயில் சமைத்து மகத்தான பேறுபெற்றார் என்கிற பக்தி சரித்திரம் உலக ப்ரஸித்தம். பூசலார் நாயனாரைப்போலவே பண்பட்ட பக்திக் கடல்போன்ற தூய உள்ளம் நமக்கெல்லாம் அமையுமா? பாமர எண்ணமும் அஜ்ஞான இருளும் நிறைந்துள்ள நம் போன்றவர்களுக்குக் கண்ணுக்கும் கருத்துக்கும் தெரியாத பூசலார் நாயனாரின் ஆலயத்தையும் பக்தியையும் பின்பற்றி வழிபடும் பரிபக்குவம் உண்டாக முடியாது என்பதனால்தான் ப்ரம்மாண்டமான கோயில்கள், குளங்கள், தெய்வ சின்னங்கள், பக்தர்களின் பக்திக்கனலை ப்ரகாசிக்கச் செய்யும் சின்னங்கள், இதிகாஸ புராண சரிதங்கள், காவிப் பூஞ்சோலைகள், சித்திரப் பகுதிகள்,

பாட்டுக்கள் முதலிய எண்ணிக்கையற்ற விதத்தில் ஸாதனங்களைப் பெரியார்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அவைகளைப் பார்க்கும்போதும் படிக்கும்போதுந்தான் நமது இதயத்தில் சிறிதாவது பக்தி என்பதும் நம்பிக்கை என்பதும் நிலைத்து வளர்கிறது. இதைத்தான் நாம் முதலில் தெரிந்து கொள்ளவேண்டும். ஒரு காலத்தில் வீரசுதந்திர நாடாயும் பல் வேறு பிருதுகளுடனும் வாழ்ந்த நம் பாரத நாடு விதிவசத்தால் அடிமையாகி அந்தகாரத்தில் திளைந்து அவதியுற்ற காலத்தில் அஹிம்ஸா தாமம் என்கிற ஜோதிதீபத்தைக் காட்டி சத்திய மென்கிற பாலத்தின்மீது சாந்தி மந்திரத்தை உபதேசித்துப் பக்திப் பாடலை ஊட்டியவாறு சுதந்திர தேவியை தரிசிக்கும் படிச்செய்த அவதாரமூர்த்தியின்—த்யாகபிம்பத்தின் — தனிச் சிறப்புக்கும்—தனிப்பெருமைக்கும்—உதவி செய்வதற்கு மக்கள் என்ன யோசனை செய்கிறார்கள் தெரியுமா? லக்ஷ்மீ! இந்த ஸ்தூபி மணிமண்டபத்திற்கு—வஸூல் செய்யச் சென்ற எனக்கு ஏற் கெனவே உள்ள அனுபவத்துடன் இன்னும் ப்ரமாதமான அனுபவம் பாடமாயிற்று: ''விடிந்தால் அஸ்தமித்தால் இதுதானா ரோதனை?.........எத்தனை பேர்கள்தான் இப்படி யாசகத்திற்கு வருவது...நினைத்ததற்கெல்லாம் ஒரு வஸூலா?'' என்று சில அம்மாமார்கள் சீறிவிழுந்தார்கள்!

நமது க்ருதஜ்ஞையை நாம் செய்யும்படித் தூண்டி வழிகாட்டும் இந்தக் கைங்கர்யத்தையா யாசகம் என்று துணிந்து சொல்வது! இக்காலத்தில் வயிற்றுப் பிழைப்புக்காகச் சிலர் ஒரு வேப்பிலைக் கொத்தை வைத்துக்கொண்டு, 'மாரியம்மனுக்கு மடிப்பிச்சை ப்ரார்த்தனை' என்று வருகிறார்கள். சிலர் மஞ்சள் துணியை உடுத்தியோ, அல்லது மஞ்சள் துணியினால் உண்டிசெய்தோ எடுத்துக்கொண்டு ஏழுமலையானுக்கு ப்ரார்த்தனை அல்லது மாங்கல்யத்திற்காகப் பிச்சை. அல்லது உபநயனப்பிச்சை, அல்லது, வெறும் நோய்க் காக ப்ரார்த்தனை என்றெல்லாம் சிலர் வருகிறார்களே! அது போலவா இதையும் நினைக்கிறீர்கள்? நீங்கள் ப்ரியத்துடன் காலணா கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் இம்மாதிரி பிச்சை —யாசகம்—என்றுமட்டும் சொல்லாதீர்கள். உங்கள் சினிமாச் செலவில், காப்பி செலவில், பவுடர், ஸ்னோ முதலிய அழகற்ற அலங்காரத்தின் செலவில், ஒரு கடுகளவு குறைத்துக்கொண்டு இந்த அழியாத புகழ் நிறைந்த கைங்கர்யத்திற்கு உதவினால் உல கம் உள்ளளவும் ப்ரகாசிக்கும்...என்று ஒரு குட்டி ப்ரஸங்கமே செய்தேன். அந்தம்மாள் சங்கத்தின் அங்கத்தினர்களல்ல. ஒரு அங்கத்தினர் அங்கு அழைத்துச் சென்றதில் இத்தகைய மரியாதை கிடைத்தது. இதைப்போல் அனுபவித்துத்தான் முற்காலத்துப் பெரியவர் "பெரிய இடம் என்று பிச்சைக்குப்போனால் கரியை வழித்து முகத்தில் பூசினார்களாம்:" என்கிற பழமொழி பிறந் தது போலும். நாங்கள் விறுவிறுவென்று எழுந்துவிட்டோம். ''இருங்கள். காப்பி சாப்பிட்டுவிட்டுப் போகலாம்'' என்றாள் அந்தம் மாள். ''நாங்கள் காப்பியாசாரத்திற்கு வரவில்லை. கடமையை நினைப் பூட்டவே வந்தோம் மிகமிக சந்தோஷம்''...என்று சொல்லிவிட்டு, புறப்படுகையில் உள்ளிருந்து வந்த ஒரு பெரியவர், "அம்மணீ! நான்

ஆபீஸ் மூலம் 20 ரூபாய் கொடுத்தாயிற்று. நீங்கள் நல்ல காரியமாய் எங்கள் வீடேறிவந்ததற்காக இந்தாருங்கள்"... என்று ஒத்தை ரூபாய் நோட்டை நீட்டினர். நாங்கள் ப்ரமித்தேபோய்விட்டோம். இதுபோல் எத்தனையோ வேடிக்கைகளைப் பார்க்கலாம்.

லக்ஷ்மீ! இந்த சந்தர்ப்பத்தில் எனக்கென்ன தோன்றுகிறது தெரியுமா? இந்த மணிமண்டப கைங்கர்யத்தின் திருப்பணிக்கு எத்தனையோ லட்சங்கள் பணம் தேவை. இவைகளுக்கு ஸ்ரீ ராஜாஜி சொல்வதுபோல் பொதுமக்களின் அன்பினலேயே அந்த மகத்தான ஸ்தூபியும் மண்டபமும் உருவாகித் தனிபபெருமை பெற்று ப்ரகாசிக்கவேண்டும். ஆதலால் ஒவ்வொரு வீட்டினரும் ஒரு சங்கல்பத்தை இம்மாதம் வரப்போகும் ஸ்ரீ வரமகாலக்ஷ்மியின் பூஜை தினமாகிய புனித தினத்தன்று ஒரு சிறிய வ்ரதமாக எடுத்துக்கொள்ள வேண்டும். அதாவது அனேகமாய் நமது இந்து சமுதாயத்தில் விவாகமாகும்போதும், இதர எந்த விதமான சுப காரியங்கள் நடக்கும்போதும் மணப்பந்தலில் இஷ்ட தெய்வ சம்பாவனை, ஆசாரிய சம்பாவனை, ஸதஸ்ஸு சம்பாவனை, அந்த ஊர் ஆலயத்திற்குச் சம்பாவனை ... என்று செய்வது வழக்கம். இது எல்லோரும் அறிந்த விஷயமேயாகும். எல்லா ஜாதியிலும் நடக்குமென்று நம்புகிறேன். ஆனல் சில ஜாதியார்களின் பழக்கவழக்கம் எனக்குத் தெரியாது.

அத்தகைய சம்பாவனைகளைச் செய்யும்போது, த்யாக மூர்த்தியாம் காந்தியடிகளின் மணிமண்டப ஸ்தூபி கைங்கர்ய சம்பாவனை" என்று தங்கள் சக்தியானுஸாரம் தனத்தைபெரிய சதஸ்வில் பஞ்சாதியுடன் பாடி. அந்தத் திருப்பணியை ஏற்று நடத்தும் தலைவர்களான மேன்மைதங்கிய கவர்னர், ஸ்ரீ ராஜாஜி, ஸ்ரீ கல்கி முதலியவர்களிடம் சேர்ப்பிக்கும் ஒரு புதிய பழக்கத்தை ஆரம்பித்துவிட்டால் இந்த முறையில் வருஷந்தோறும் ஆயிரக்கணக்கான சுபகாரியங்களை நடத்தும் மூலம் ஆயிரக்கணக்கான தனமும் சேர்ந்துவிடும் என்பதில் சந்தேகமே இல்லை.

ஒரு சிறிய குழந்தை புண்யாகவாசன சின்ன கல்யாணம் முதல் பெரிய தாலிகட்டும் கல்யாணம், வீடு கட்டிய க்ருகப்ரவேச கல்யாணம், சஷ்டி பூர்த்தி கல்யாணம் முதலிய சகலத்திற்கும் சுமங்கலி ப்ரார்தனை செய்து ஆரம்பிப்பதுபோல் இந்த தரும சம்பாவனைகளைச் செய்ய முதலில் ஸ்த்ரீகள் தூண்டி ஆடவர்கள் இசைந்து நடத்தினல் சிரமமின்றிக் காரியம் கைகூடும் என்கிற நம்பிக்கை எனக்கு ப்ரமாதமாயிருக்கிறது. இந்த விஷயத்தில் அதிக சிரமம் தோன்ருது. நூற்றுக்கணக்கான—ஏன் ... சில இடங்களில்—ஆயிரக்கணக்கான லக்ஷக்கணக்கான பணம் செலவிடும்போது இந்த சம்பாவனை பெரிய பாரமாகத் தோன்ருது. கல்யாண குஷியில் செய்யும்போது ஒரு மகத்தான உத்ஸாகத்துடன் செய்யக் கைவரும். இத்தகைய பழக்கத்தை மற்ற சம்பாவனைகளைப்போலச் செய்து தீருவது என்று ஆரம்பித்தால் பல குடும்பங்களும் பின்பற்றும். தவிர, இதற்கு தினசரிப் பத்திரிகைக்காரர்களும் சரி, மற்ற இதர வார மாத பத்திரிகைக்காரர்களும், சரி, சரியானபடி உத்ஸாகமூட்டும் முறையில் இம்மாதிரி சம்பாவனைகள் செய்த விவரத்தை வெளியிட்டால் அதையே எதிர்பார்த்துச் சந்தோஷித்து மற்றவர்களும் செய்யத் தூண்டும். தமது

கைங்கர்யம் பத்திரிகையில் ப்ரகாசிக்கிறது என்பதைப் பலரும் விரும்பி மகிழ்வார்கள்.

முதலில் இந்தச் செய்கை சிறிது தடுமாற்றமாய் மறந்துபோய் விடுவதாக இருக்கலாம். இதற்காகவே ஸேவைசெய்யும் நபர் எந்த கல்யாணவீட்டாருக்கும் முதலில் நினைப்பூட்டவேண்டும். சம்பாவனைகளை வாங்கி உடனே அனுப்பிவைத்துப் பத்திரிகைக் காரர்களுக்கும் தெரிவிக்கவேண்டும். இப்படியே சில மாதங்கள் பழகினால் நாளாவட்டத்தில் மற்ற இதர சம்பாவனைகளைப்போல் மணிமண்டப சம்பாவனை வாழ்க்கையோடு ஒட்டி நிலைத்துவிடும். இன்று கட்டிடத்தை எழுப்ப உதவுகிறது. பிறகு அதன் லக்ஷியத் திற்கு என்றென்றும் உதவி செய்துவரும் இது விளையாட்டுச் செய்கையல்ல. இதய பூர்வமான திருப்பணியே யாகும்.

லக்ஷ்மீ! நான் ஸ்ரீ வைஷ்ணவர்களின் விவாகச் சடங்குகளின் அனேக இடங்களில் மேல் குறித்த சம்பாவனைகளைப் பார்த்திருக் கிறேன். அதனால்தான் இதையும் அவைகளுடன் சேர்த்துவிடும் படி ஒரு பழக்கத்தை உண்டாக்கிவிடவேண்டும் என்று எனக்கு அபாரமான ஆசை மூண்டதால் உனக்கு இதை எழுதுகிறேன். நீயும் இதை உங்கள் ஊரில் ப்ரசாரம்செய்து உதவிபுரியத் தியங் காதே. மாமி ஏதோ பயித்யக்காரி என்று பரிகஸிக்காதே. உன் நாத்தனார் மகளின் கல்யாணத்தில் மணிமண்டப சம்பாவனையை வாங்கி, கமிட்டியாருக்கு அனுப்பிவிடு.

இதைத் தவிர இன்னொன்றும் செய்யலாம். வ்யாபாரிகள் முக்ய மாக ஒரு உண்டிவைத்து தினம் தமது வ்யாபாரத்திற்குத் தக்க படி காலோ, அரையோ, அந்த மணிமண்டப உண்டியில் சேர்ப் பது என்கிற வழக்கம் வைத்துக்கொள்ளவேண்டும். சிறிய வ்யா பாரிகள் காலணாவாயும் சேர்க்கலாம். பெரிய வ்யாபாரிகள் கால் ரூபாயாயும் சேர்க்கலாம் முதல் தேதியன்று அதில் உள்ள துகையை அப்படியே கமிட்டியாரிடம் அனுப்பிவிட்டு மீண்டும் உண்டி வைக்கவேண்டும்.

பள்ளிக்கூடங்கள் கலாசாலைகள் முதலிய இடங்களில் சம்ப ளம் வாங்கும் கட்டாயத்தைப்போல் ஒவ்வொரு மாணவ மாணவி களிடமும் மிக ஸொல்பமான தொகையை உண்டியில் வாங்கி சேமித்துக் கமிட்டியாருக்கு உதவினால் மகத்தான பேருபகார மாகிப் பெருகிவிடும்.

டாக்டர்கள் ஒரு உண்டிவைத்துத் தம்மிடம் வரும் பேஷண்டு களின் அந்தஸ்திற்குத்தக்கபடி தம்பிடியோ, காலணாவோ, கால், அரை, ஒண்ணு என்கிற முறையில் ரூபாயோ வஸூலித்துக் கமிட்டியாருக்கு அனுப்பும் திருப்பணியிலீடுபட்டால் கட்டாயம் இந்த வகையில் கைமேல் பலனே கிடைக்கும். இது சாமான்யமான தல்ல. நான் எழுதுவதெல்லாம் ஏதோ பொழுதுபோக்கிற்கான பிதற்றல் என்று நினைத்துவிடாதே! செய்துபார்த்தால் உண்மை விளங்கும். எங்கள் சங்கத்தில்கூட ஒரு உண்டியை வைத்திருக் கிறோம். சிறு துளி பெருவெள்ளம். என்ற பழமொழியின் உண் மையை இதில் பார்க்கலாமே! நீயும் உங்கள் டாக்டர் வீட்டில் ஒரு உண்டியைக்கொண்டு வைத்துவிட்டு விபரமாகச் சொல்வதோடு முதலில் நீ ஒரு ரூபாயைப்போடு. பிறகு காலணாவாகவே சேரட்டும்.

—இங்ஙனம், மாமி.

# கொடுக்கிற தெய்வம்........!

"கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக்கொண்டுவந்து கொடுக்கும்" என்ற பழமொழியை விடாது சொல்லிக் கொண்டு வந்தால் காரியம் நடக்குமா! பெண்ணுக்கு 20 வயது பூர்த்தியாகப் போகிறதே. மருமகப்பிள்ளையைக்கூட கடவுள் கூரையைப்பிரித்துக் கொண்டு வந்து கொட்டுவாரோ?" என்று கணவரிடம் இறைந்தாள் காமு. சோமுவும் மருமகப்பிள்ளைக்காகத் தேடாத இடமில்லை. வேளை வந்தால்தானே!...பாவம்! காமுவுடன் சண்டை போடுவதில் என்ன லாபம்? கல்யாணத்தைச் செய்துவிட வேண்டும் என்கிற பரபரப்புக்காக அவள் சதா நச்சரிக்கிருள்...... என்று சோமு பொறுமையாகவே போவான்.

அன்று தம்பதிகளிடைய வரன் வேட்டை விவகாரம் மிகவும் வலுத்து வாக்குவாதமாகி விட்டது. இரவு நெடு நேரமாகியும் தூக்கம் வரவில்லை. "இதோ பாருங்கோ! நீங்க சரியான வரனைத்தேடிப் பிடிக்கவில்லை என்ருல் பயித்தியமோ, அசடோ, எதுவானாலும்சரி!...என் சித்தி பிள்ளைக்கு நான் கற்பகத்தைக் கொடுத்துவிடப்போறேன்" என்ருள் காமு கடுங்கோபத்துடன்.

வழக்கப்படி சோமு சாந்தத்துடன், "அம்மா பரதேவதை!... அப்படிமட்டும் செய்யவிடாதே! கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொடுக்கும்"..........என்று பழய பல்லவியைப் பாடும் போது, காமுவுக்கு உடம்பே பற்றி எரிந்தது! அதேசமயம், இவர்கள் படுத்துள்ள மேல் கூரையில் சலசலவென்று ஆள் நடக்கும் ஓசைகேட்டு இருவரையும் கதிகலங்கச் செய்தது. அப்போதும் காமு தன ஆத்திரத்தை விடாது, "ஐயையோ! கொடுக்கிற தெய்வந்தான் கூரைமேலே மருமகப்பிள்ளையுடன் வந்திருக்கிருப்பலே தோன்றது! தலைவிதியே! வயித்தை வாயேகட்டி 2000 ரூபாய் கல்யாணத்திற்காகச் சேர்த்துவைத்திருப்பதையும் கூரைமேலே வந்துள்ள தெய்வம் கொண்டுபோய் விடப் போகிறதே! பாங்கியில் கட்டும்படி முட்டிக்கொண்டேன். கட்டாமல் வைத்திருக்கிறீர்களே! என்ன செய்வது?" என்று அலறிஞள்.

அதேசமயம், மெல்லிய குரலில், "சோமூ! சோமூ!" என்று கூரைமேல் கூப்பிடும் குரலைக்கேட்டுத் தீமைமிதித்தவர்கள் போலத் துள்ளிஞர்கள். மீண்டும், "சோமூ! ஓசைப்படாமல் வாசக் கதவைத் திறவுங்கள். பயப்படவேண்டாம்" என்ற குரலைக்கேட்டு தம்பதிகள் நடுங்கியபடியே கதவைத்திறந்து பார்த்தார்கள். வாசப்பக்கம் ஓட்டுமீதிருந்து கையில் ஒரு சிறிய மூட்டையுடன் பக்கத்துவீட்டு ராமு குதித்தான். வியப்பும் திகைப்பும் சொல்லி முடியாமல் விழித்த தம்பதிகளைப் பார்த்த ராமு "உஸ்! பயப்பட வேண்டாம்! என் தம்பி இன்றுதான் பமபாயிலிருந்து கையில் ரொக்கமாக 25ஆயிரம்ரூபாயுடன் வந்திருக்கிருன். இந்தப்பணத்தை பத்திரமாக வையுங்கள். உங்கள் பெண்ணின் புகைப்படமனுப்பி எழுதியதற்காக, தம்பி கல்யாண ஸன்னதமாக வந்துவிட்டான். வாசலில் கூச்சலிட்டுத் திருடனைப் பிடிக்கவேணும். கொல்லை ரூமில் கள்ளனை வைத்து என்தம்பி கதவைப் பூட்டிவிட்டான்" என்றதைக் கேட்டதும் எங்களுக்கு எப்படி இருக்கும்? நீங்களே சொல்லுங்கள்! மருமகப்பிள்ளையைக்கூட கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிரித்துக்கொண்டுவந்து கொடுக்கவில்லையா?

# மேனாட்டுத் தத்துவம்

## எம்பிடாகிளிஸ்

ரா. ஸ்ரீ. தேசிகன், M. A.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

இவர் பார்மினிடிஸைப்போலவே செய்யுட்கள் மூலமாகத் தம் கருத்துக்களை வெளியிட்டார். லுக்கிரிஷஸ் (Lucretius) என்பவர் இவருடைய கவிதைத் திறத்தைப்போற்றிப் பேசியிருக்கிறார். இவர் ஒரு கவியா? அல்லது இல்லையா? என்பது ஆலோசிக்கப் படவேண்டிய விஷயமாகும்.

இவர் பல துறைகளில் இறங்கி ஆழ்ந்து சிந்தித்திருக்கிறார். பௌதிக சாத்திரத்திலும், தத்துவ சாத்திரத்திலும், சமயத் துறையிலும் தாம்கண்ட உண்மைகளை வெளியிட்டிருக்கிறார்.

பௌதிகத்துறையில் இவர்கண்ட ஒருபெரிய உண்மை கூர்ந்து நோக்கத்தகுந்தது: காற்று ஒரு தனிப்பொருள் என்றதைக் கண்டு பிடித்தார். ஒரு பக்கெட்டையோ, அல்லது பாத்திரத்தையோ தலைகீழாகத் தண்ணீரில் அமுக்கினோமானால், தண்ணீர் அதற்குள் புகுகிறதில்லை. பாத்திரத்திலுள்ள காற்று தண்ணீர் உள்ளே புகாவண்ணம் தடுக்கின்றது. நடுவிலிருந்து வெளியே ஓடும் சக்தியையும் (Centrifugal) இவர் உணர்ந்ததாகத் தெரிகின்றது, தண்ணீரை நிறைத்து ஒரு கோப்பையைக் கயிற்றின் நுனியில் கட்டிச் சுற்றினால் தண்ணீர் வெளியிலே வருகிறதில்லை.

செடி கொடிகளிலும், ஆண் பெண் என்ற பால் உணர்ச்சிகள் இருப்பதாகக் கண்டார். அவைகளுக்கும் சுகதுக்கங்கள் உண்டு என்றார். போஸும் இந்த உண்மையைக்கண்டு அதை வெளியிட்ட செய்தியை நாம் அறிகின்றோம அன்றோ?

விசித்திரமான பிறவிகளில் இவர் நம்பிக்கை வைத்திருந்ததாகத் தெரிகின்றது. கழுத்துக்கள் இல்லாமல் தலைகள் இருக்கலாம்! தோளகள் இல்லாமல் கைகள் இருக்கலாம்! நெற்றிகள் இல்லாமல் கண்கள தோன்றலாம்! மாட்டு உடல்கள் மனிதர்களின் தலைகள்—இவைகளைக் கொண்ட பிறவிகள் காட்சி அளிக்கலாம்!—என்றெல்லாம் விசித்திரமாய் அவர் கனவுகள் காண்கின்றார்!

வான சாத்திரத்தில் இவர் கண்ட விஷயம் நம் உள்ளத்தைக் கவராமற்போகாது. சந்திரனுக்குச் சொந்த ஒளிகிடையாது. மற்றொருவெளிச்சததைத்தான் அதுபிரதிபலிக்கும்படிச்செய்கின்றது என்று மொழிகின்றார். சூரியன விஷயத்திலும் இதே கொள்கையை இவர் காண்கின்றார். சூரியகிரகணங்கள நிகழ்வதற்குரிய காரணத்தையும் தருகினறார். இக்காரணத்தை இவர் அனக்சகோராஸ் மூலம் தெரிந்திருக்கலாம். பூமிக்கும் சூரியனுக்கும்

இடையே மதி தோன்றுவதால் சூரியக்கிரகணம் நிகழ்கின்றது என்ற தத்துவம் எத்தனையோ நூற்றாண்டுகளுக்குமுன்பு கண்டு பிடிக்கப்பட்டதை நாம் கண்டு வியக்காமலிருக்கமுடியுமோ?

இத்தாலிய வைத்திய முறைப்பள்ளி ஒன்றை இவர் நிறுவிய தாகத் தெரிகின்றது. இந்த வைத்திய ஆராய்ச்சிக்கூடத்தில் எழுந்த கருத்துக்கள் பிளேட்டோ, அரிஸ்டாடில் இவைகளைக் கவர்ந்தனவாக அறிகின்றோம். அந்தக் காலத்துப் பௌதிகப் பண்பையும் தத்துவ விசாரணையையும் ஆட்டிவைத்தன என்று சொல்லலாம்.

உலக உற்பத்தியைப்பற்றியும் இவர் ஆழ்ந்து சிந்தித்திருக்கிறார். தேல்ஸ், அநாக்சிமினிஸ், ஹெராகிளிடஸ்— இவர்கள் தனித்தனி யே கண்ட மூலப்பொருள்கள் யாவையும் சேர்த்து—இவை தாம் பிரபஞ்சத்தின் தோறறத்திற்கு மூலகாரணங்கள் என்றார். மண், காற்று, தீ, நீர்— இவைகள் அநாதிகளாய்த் திகழ்கின்றன. ஆனால் இவைகள் ஒன்றோடு ஒன்று கலக்கும். அன்பு (Love) என்ற ஒரு தத்துவம் இவைகளைச் சேர்த்து வைக்கின்றது, 'கலகம்' '(Strife)' என்ற வேறொரு தத்துவம் இவைகளைப் பிரிக்கின்றது. நாமும் முக் குணங்களால் உலகம்தோன்றுகின்றது என்றுசொல்லுகின்றோம் அன்றோ! இக்குணங்கள்மீது முத்தெய்வங்களை நாட்டினோம்; சத் துவகுண மூர்த்தியாய் நின்று உலகத்தைக் காப்பாற்றுகின்றார் விஷ்ணு; ரஜஸ் குணமாயிருந்து பிரமன் படைக்கின்றார்; தாமச மாய் நின்று சிவன் அழிக்கின்றார். இந்த மூன்று வர்ணக்கலப்பு களால் பலவித சிருஷ்டிகளாகிற உயிர் ஓவியங்கள் நம்முன் நடமாடுகின்றன.

இவைகள் சேர்ந்த உருவங்கள் அழிகின்றன. தனித்தனி யாய் நின்ற காற்று, மண், தீ, நீர்— இவைகள் அழியாமலிருக்கின் றன. இவைகள் சேர்வதற்கு ஒரு நோக்கம் இருக்கிறதா? இவை களை ஆட்டிவைக்கிற சக்தி ஒன்று இருக்கிறதா? இத்தகைய கேள்விகளை இவர் எழுப்பவில்லை. ஏதோ இவைகள் தற்செய லாய்ச் சேர்கின்றன; பிரிகின்றன. கடலில் இரண்டு மரக்கட்டைகள் தற்செயலாய்ச் சேர்ந்து பிரிகிறதை ஒக்கின்றது, இந்த உலக உற்பத்தி நாடகம் என்று சொன்னால் அது மிகப் பொருத்தமாகும்.

ஹெரகிளிடஸ் எல்லாம் போராட்டத்தால் நிகழ்கின்றன என்று கூறினர்; இவரோ அன்பையும் ஒரு தத்துவமாகச் சேர்த்து மொழிகின்றார்.

இந்தப் பிரபஞ்சம் ஒருவட்டம். பொற்காலத்தில் (Golden Age) துவாபரயுகத்தில் கலகம் இதற்கு வெளியிலிருந்தது; உள்ளே அன்பு அரசுசெலுத்திற்று. பிறகு கலகம் உள்ளே புகுந்து அன் பைத்துரத்தி வெளியேற்றிவிட்டது! உலகமாறுதலுக்குக் கார ணம் கலகத்திற்கும் அன்பிற்கும் இடைமறுது நிகழும் போர்தான் என்று இவர் புகல்கின்றார்.

மேலும் சில சமயத்தில் பைத்தகோரஸ்ஸின் கொள்கைகளைப் பின்பற்றுகின்றார். இவர் எழுதிய நூலின் சிதைவில் பின்வரும்

வாக்கியம் காணப்படுகின்றது: 'நான் இதற்குமுன் பையனுயிருந்திருக்கிறேன்; பெண்ணுயிருந்திருக்கிறேன்; புதராய், புள்ளாய், மீனுய்ப் பிறந்திருக்கிறேன்.

"இதை உண்பாயாக; இதை உண்ணற்க" என்று உபதேசம் செய்கின்றுர். பல பிறவிகளை எடுத்து ஈற்றில் மனிதன் பேரின்பத்தை அடைகின்றுன் என்ற ஆர்பியஸ் கொள்கையைப்பற்றியும் இவர் பேசுகின்றுர்.

'இந்த உலகம் ஒரு குகை; அந்தக் குகைமீது விழுகின்றன விண்ணிலுள்ள தத்துவங்களின் நிழல்கள் என்று இவர் கூறுகின்றுர். இதேகருத்தைத்தான் பிளேட்டோவும் வெளியிடுகின்றுர்.

மேலும் நீர், நெருப்பு, மண், காற்று இந்த நான்கு பொருள்களும் இந்தப் பிரபஞ்சத்திற்கு உபாதான காரணமாயிருக்கின்றன: (The Material Cause) இவைகளுக்குப் புறம்பாக வேறு சக்திகள் இல்லை என்று இவர் தேர்ந்தார்.

ஆகாயம் முட்டை வடிவாக இருக்கிறது என்று இவர் கூறிய கருத்து ஆர்பிக் கொள்கையின் சாயலைக் காட்டுகின்றது. இரண்டு சூரியர்கள் உண்டு என்று இவர் சாற்றுகின்றுர். ஒன்று அசலாகும்; அதன் நிழல்தான மற்றென்று என்று இவர் மொழிவது நோக்கத் தகுந்தது.

பிளேட்டோவும் உலகத்தில் தோன்றுகிற ஒவ்வொரு பொருளும் அதன் மூலத்தின் நிழல் என்று உரைக்கின்றுர். இவர் ஏகதத்துவவாதத்தை (Monism) ஒப்புக்கொள்ளவில்லை. மனிதன் எல்லாவற்றையும் அறியமுடியாது. அவன் அறிகிறது ஏதோ ஒரு மூலைதான். பார்மினிடீஸை எதிர்த்துப் பேசுகின்றுரோ என்று கருதும்படி இருக்கின்றது இவர் மொழிகின்ற தத்துவம்.

பலபேர்களுடைய தத்துவங்கள் இவரிடத்தில் காட்சி அளித்தாலும், எல்லாவற்றையும் ஒரு பௌதிகப் பண்போடு பார்க்கின்றுர் என்ற உண்மையை யாவராலும் மறுக்கமுடியாது.

## அனக்சகோராஸ் (Anaxagoras)

பைத்தகோராஸ், ஹெராகிளிடீஸ், பார்மினிடீஸ் இவர்களைப் போலவே பெரிய இடத்தை வகிக்காமற் போனுலும், இவருக்கும் ஒரு தகுந்த இடம்தத்துவ சரித்திரத்தில் உண்டு என்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. இவர் ஐயோனியாவைச் சார்ந்தவர். அறிவைக்கொண்டு எதைச் சாதிக்கமுடியுமோ, அதில்தான் இவருக்கு நம்பிக்கை உண்டு.

இவர் சுமார் கி.மு.500ல் கிளாசோமெனே (Klazomenai) என்ற இடத்தில் பிறந்தார். ஐயோனியாவிலிருந்து ஏதன்ஸுக்கு இவர் தம்முடைய அறிவுச்சுடரை எடுத்துச் சென்றுர். பெரிகிளிஸ் (Pericles) இவரைப் போற்றினுர். யுரிபிடீஸ்ஸும் இவருடைய உபதேசத்தால் பயன் பெற்றவர் என்று சிலர் கருதுகின்றனர். ஆனுல், இக்கருத்தை முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று ரசல் மொழிகின்றுர்.

நம்முடைய இந்திரியங்கள் அளிக்கின்ற சான்றுகளே தக்க சான்றுகளாகும். ஒன்று ஒரு காலத்தில் தோன்றி மற்றொரு காலத்தில் அழிந்தது என்பது கிடையாது. பொருள்களுக்கு ஆதியுங் கிடையாது அந்தமும் கிடையாது என்று உபதேசம் செய்தார்.

சூரியனை ஒரு தெய்வமாகப் போற்றி வந்த நாட்டிலே, அது ஒரு 'சோதிக்கும் கல்' என்றார். சந்திரனும் நம்முடைய பூமியைப் போல ஒரு பூமிதான் என்று கூறலுற்றார். இந்தக் காரணத்தால் அவரைச் சிறையில் வைத்தார்கள். பெரிகிளீஸ் அவரைச் சிறையிலிருந்து தப்பும்படிச் செய்திருக்கலாம். மீண்டும் ஐயோனியாவுக்கு சென்று அங்கே தம் தத்துவப் பள்ளியை நிறுவினர். அவர் தம் சாஸனத்தில் தம்முடைய மரண தினம் பள்ளிக்கூடத்துச் சிறுவர்களுக்கு ஒரு விடுமுறை நாளாக இருக்கவேண்டும் என்று குறித்தார்.

மேலும்,ஒரு பொருளைக் கணக்கிலாக் கூறுகளாய்ப் பிரித்துக் கொண்டே போகலாம். ஒவ்வொரு கூறிலும் எல்லா அம்சங்களும் தோன்றும். உதாரணமாக, நெருப்பில் நெருப்பின் அம்சம் மிகுதியாகக் காணப்படும். மற்ற அம்சங்கள் சற்றுக் குறைவாகக் காட்சி அளிக்கும். நாமும் அப்படித்தான் கருதுகிறோம். இதைப் பஞ்சிகரணம் என்கிறோம் ஒவ்வொரு பொருளிலும் பஞ்சபூதங்கள் தோன்றும். தண்ணீரில் தண்ணீரின் அம்சத்தை மிகுதியாகப் பார்க்கின்றோம்.

இவர் மனோதத்துவத்தை (Nons) ஒரு தனித் தத்துவமாகக் கருதுகின்றார். இது சேதனமாயுள்ள எல்லாப் பொருள்களையும் ஆட்டி வைக்கிறது. இது அகண்டாகாரமாயிருக்கிறது. இது தன் மீதே ஆணை செலுத்துகிறது. இதைத் தூண்டுகிற வேறு பொருளில்லை, பொருள்களின் சலனத்திற்கு இதுதான் காரணம். இந்தச் சக்தி மனிதர்களிடமும் சரி,விலங்குகளிலும் சரி, ஒன்றாய்த் திகழ்கின்றது. மனிதனுக்குக் கைகள் இருக்கின்றன. இந்த அம்சந்தான விலங்குகளிலிருந்து மனிதனைப் பிரிக்கின்றது.

அவயவங்களின் மாறுபாடுகளால் அறிவின் மாறுபாடுகள் தோன்றுகின்றன. இது வெறும் தோற்றமே தவிர வேறில்லை.

தற்செயலாய் ஒன்றும் நடக்கவில்லை; ஏதோ ஒரு சக்திதான் எல்லாவற்றையும் தூண்டுகின்றது என்று இவர் ஒப்புக்கொண்ட போதிலும் கடவுளில் இவருக்கு நம்பிக்கை இல்லை. இவரை ஒரு நிரீச்வரவாதி என்று இயம்பலாம். மதிக்குச் சுயம்பிரகாசம் கிடையாது என்று சாற்றியவர் இவரே. கிரகணங்களைப்பற்றிச் சரிவர ஆராய்ச்சி செய்தவர் இவரே. சூரியனுக்குக் கீழ்தான் மதியிருக்கிறது என்று சொன்னர். சூரியனும் தாரகாகணங்களும் அனல் வீசும் கற்களே! நக்ஷத்திரங்களின ஒளியை நாம் நுகர முடியாததற்குக் காரணம் அவைகள் மிசச்சேணிலிருப்பதுதான். மதியில் மலைகள் இருக்கின்றன. மக்களும் வசிக்கலாமென்றார். எத்தனையோ காலத்திற்குமுன் நவீன ஆராய்ச்சிகளைப்பற்றிச் சிந்தித்தவர் இவர் என்றால் இது மிகையாகாது.

 வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்

# பக்தியின் மகிமை

வனஜா! ஏது நீ கூட புஸ்தகத்தை மறந்து உட்கார்ந்திருக்கிறாய்? படிக்கவில்லையா?

வனஜா:—ஆமாம்; உனக்கு எப்போதும் கேலிதான். பின்பு நீமாத்திரம் படிக்காமலே மார்க் வாங்கிவிடுவாயா! எனக்கு மூளை குறைவு, அதிகமாய்ப் படிக்கிறேன்; உன்னைப் போல் புத்திசாலி இல்லேம்மா, நான்.

பானு:-இதற்கெல்லாம் கோபித்துக்கொள்கிறாயே, வனஜா! உன்னை எப்போது பார்த்தாலும் புஸ்தகமும் கையுமாகவே இருப்பாயே என்று கேட்டேன்மா... கோவித்துக்காதே.

வனஜா:—எப்படிப் படிப்பவர்களாய் இருந்தாலும் அஸ்தமனத்தில் எந்த பயித்தியமும் படிக்காது. அதைவிட மோசமாக்கிவிடுகிறாயே, என்னை.

பானு:—என்ன!...என்ன! அஸ்தமிக்கும்போது படிக்கக் கூடாதா? அது என்ன சாஸ்திரம்? எனக்குத் தெரியாதே; அதைச் சொல்லு.

வனஜா:—ஆமாம்! உனக்குத் தெரியாதாக்கும், பாவம்! யாரிடம் கதை பண்ணுகிறாய்? அஸ்தமிக்கும்போது படித்தால் அன்று படித்த படிப்பு பூராவும் அஸ்தமனம் மங்குவது போல் மங்கிப்போகுமாம். அதனால் நான் எங்க வீட்டில் அந்தி வேளையில் படிக்கக்கூடாது என்று திட்டுவார்கள். கொஞ்ச நாழி விளையாடலாம் என்றால் வீதியில் ஓட எனக்குப் பிடிக்காது; உட்கார்ந்து கிடக்கிறேன்...

பானு:—என் வனஜா, உங்க வீட்டில் இவ்வளவு பெரிய மாடி வைத்துக்கொண்டு உனக்கு ஓடியாட இடம் இல்லையா? உங்க மாடியில் எவ்வளவு ஜோராய் ஓடலாம். வாயேன், போகலாம். நீ சொல்வதுபோல் பெண் குழந்தைகள் வீதியில் விகாரமாய் ஓடுவது அஸங்கியம் தான். எங்க வீட்டில்கூட வீதியில் ஓடினால் உதைப்பார்கள். சரி, இரு; ஒரு நிமிஷத்தில் நம் சிநேகிதிகளை அழைத்துவந்துவிடுகிறேன். மேலே போய் விளையாடலாம். ஆமாம்... உங்க அம்மா திட்டமாட்டார்களே?

வனஜா:-சீசீ, எங்க அம்மா ஒன்றும் சொல்லமாட்டாள். சீக்கிரம் ஓடிவா, போ—என்று சொல்லிவிட்டுத் தோழிகளை எதிர்பார்த்து நின்றிருந்தாள்.

ஐந்து ஆறு பெண்களோடு பானுவும் வந்தாள். எல்லோரும் குஷியுடன் மேல் மாடிக்கு ஓட்டம் எடுத்தார்கள். விசாலமான மேல்மாடியைப்பார்த்த எல்லாச்சிறுமிகளுக்கும் சந்தோஷம் கொந்தளித்தது. நாலாபுறமும் செடிகொடிகள் படர்ந்து இருந்ததால் காற்று ஜிலுஜிலு என்று வீசியது. எல்லோரும் விளையாடக் கிளம்பும் சமயம், ஒரு பெண், "பானு! நான் வீட்டுக்குப் போகிறேனம்மா! சாயங்காலவேளையில் [illegible]ப்போல்

செடியும், செட்டுமாய் இருக்கும் தனி இடங்களில் விளையாடி ஞல் நாம் தனியாய் இருப்பதைப் பார்த்து, ஏதாவது பேய், பிசாசு பிடித்துக்கொள்ளுமாம். 'கன்யா பசங்கள் சாயங் காலம் தனியாய்ப் போகாதீர்கள். மோகினி பிடித்துக்கொள் ளும்' என்று எங்க பாட்டி அடிக்கடி சொல்லுவாள். ஐயையோ நான் போறேன்மா'' என்று கிளம்பினுள். அவ்வளவுதான்! இளம் உள்ளங்களில் பயம் பிடித்து உலுக்கியது. ஏதோ பிசாசே வந்து துரத்துவதுபோல் நினைத்து எல்லோரும் உருட்டி அடித்துக்கொண்டு கீழ்மாடியை வந்து அடைந் தார்கள். ஒன்றும் அறியாத வனஜா பேய் பிசாசு என் பதைக் கேட்டுப் பயத்தில் நடுங்கிவிட்டாள். இதைக் கவனித்த பானு, ''போங்கடீ!......விளையாட ஆசையாய்க் கூட்டதற்கு வனஜாவுக்கு வீண் பயத்தை உண்டாக்கிவிட்டீர்கள். பேய், பிசாசு குடியிருக்கும் வீடுகள் இருக்கும் இடத்தில் வரவே வராது. குடியில்லாத பாழடைந்த வீடு, காடுகள், தோப்பு முதலான இடங்களில்தான் இருக்கும்.

கமலப்:—ஆமாம்!...ரொம்ப தெரியும் உனக்கு! எங்க அக்கா தினம் மேல்மாடியில் தனியாகப்போய் உட்கார்ந்து தான் வாசிப்பாள். அப்போதுதான் அவளைப் பிசாசு பிடித்துக் கொண்டுவிட்டதாம். எவ்வளவோ நாள் மந்திரம் செய்து இப்போதுதான் எங்க அக்காவை பிசாசு விட்டுவிட்டதால் நன்றாய் இருக்கிறுள். அதனுல்தான் எனக்கு மொட்டை மாடிக்குப் போவது என்றாலே பயம்.

பானு:—ஆமாம்; பிசாசாம் பிசாசு!...ஹிஸ்டீரியா வந்து இருக்கும்; அதைப்போய் பேய் என்று பட்டம் கட்டி இருப் பீர்கள்! பயப்படுபவர்களைத்தான் பிசாசு மிரட்டும். ஒரு வசனம் சொல்வார்கள்: ''மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்'' அதுபோல் பயம்தான் பிசாசேதவிர பிசாசு என்பதே ஒன்றும் கிடையாது. வீணாய் ஏன் பயத்தைக் கிளப்புகிறாய்?

ஸரஸா:—ஆமாம்; நீ ரொம்ப பெரிய மனுஷி! உனக்கு எல்லாம் தெரியும்! நாங்கள் ஒருவாட்டி எங்க க்ராமத்திற்கு போயிருந்தோம். அங்கு தினம் ராத்திரி பிசாசு உலாத்துமாம். எங்க பாட்டி அந்தப் பிசாசுகளைப்பற்றி எல்லாம் சொல்வாள். அதைக் கேட்டாலே பயமாயிருக்கும், சொல்றேன்கேள்.

பானு:—ஸரஸா! போதும!......போதும்!......உன் பிசாசு புராணம்!........தயவுசெய்து நீங்கள் வீட்டுக்குப்போய் வாருங்கள்; வனஜா ஏற்கெனவே பயந்துவிட்டாள். இன்னும் ஏதாவது ஆய்விடப்போகிறது; மரியாதையாய்ப் போங்கள் அம்மா!...விளையாடக் கூப்பிட்டது வினையாய்விட்டது! நல்ல பிசாசு புராணம்!—என்று அந்தப் பெண்களை அனுப்பிவிட்டு வனஜாவை தைரியம் சொல்லித் தேற்றிவிட்டு வீட்டிற்குப் போனுள்.

வனஜாவின் மனது பயத்தால் நடுங்கிக்கொண்டே யிருந்தது. புஸ்தகத்தை எடுத்துப் படித்தால் அதிலும் மனது செல்லவில்லை. இப்படியும், அப்படியும் உலாவிப் பொழுதைக் கழித்து, சீக்கிரம் சாப்பிட்டுப் படுத்துவிட்டாள். படுத்ததும் சற்று அயர்ந்துவிட்டாள். ஆனால், நள்ளிரவில் தூக்கம் கலைந்துவிட்டது. கேட்க வேண்டுமா? ஏற்கெனவே மிரண்ட உள்ளத்தில் பிசாசுகள்போல் ஏதோ சில உருவங்கள் தோன்றி உலாவுவதுபோல், ஓடுவதுபோல் இன்னும் பயத்தைக் கிளப்பியது. வனஜாவுக்கு தலை ஓரேயடியாய்ச் சுற்றத் துடங்கியது. உடம்பெல்லாம் வியர்த்துவிட்டது. போர்வையை இழுத்து மூடிக்கொண்டு கண்ணைக் கெட்டியாய்ப் பொத்திக்கொண்டு படுத்தாள்: ஆனாலும் பயம் அவளைவிட்டுப் போகவில்லை. மெள்ள எழுந்து அவள் அம்மாவைக் கட்டிக்கொண்டு படுத்தாள். பிறகு தன்னையும் மறந்து தூங்கிவிட்டாள். ஆனால் தூக்கத்தில் பயத்தால் அவள் உடம்பு சற்றுக்கொருதரம் தூக்கித்தூக்கிப்போட்டது. இதைக் கவனித்த அவள் தாய் ஒன்றும் புரியாது எங்கோ பயந்து இருப்பதாய் நினைத்து இறுகக் கட்டிக்கொண்டு படுத்தாள்.

பொழுது நன்றாய் விடிந்து வனஜா தட்டித்தள்ளாடிக் கொண்டு வந்தாள். உடம்பு நெருப்பாய்க் காய்ந்துகொண்டிருந்தது. இவள் உள்கடுக்கலை அறியாத இவள் தாய் காப்பி கொடுத்து, டாக்டர் வீட்டுக்கு அனுப்பினாள். வனஜா தன் பயத்தைத் தாயிடம் சொல்லப் பயந்து பொட்டலம்போல் படுத்துக்கிடந்தாள். ஆனால், தூக்கத்தில் அலறியதைக் கவனித்த அவள் தனக்குத் தெரிந்த எதிர் வீட்டுப் பாட்டியை வரவழைத்து மந்திரிக்கச் சொன்னாள். பாட்டி மந்திரித்து விட்டு, "குழந்தை நன்றாய் எங்கோ பயந்து இருக்கிறாள். சாயங்காலமும் வந்து மந்திரிக்கிறேன். இந்த விபூதியை இரண்டு தடவை தடவு" என்று சொல்லிச் சென்றாள்,

பானு வழக்கம்போல் பள்ளிக்கூடம் போகும்பொழுது வனஜாவை அழைத்துப்போக வந்தாள். ஆனால் ஜுரத்தோடு தூங்கும்வனஜாவைப்பார்த்ததும் அவள்சந்தேகம் உறுதியாய் விட்டது. வனஜா நேற்று பயந்ததை அவள் தாயிடம் சொல்லி ஏதாவது மந்திரம்போடச்சொல்லிவிடலாம் என்று உள்ளே போனாள். பானுவைப் பார்த்ததும் வனஜாவின் தாயார், "பானு! இன்று அவள் பள்ளிக்கூடம் வரவில்லை. காரணம் இல்லாது திடீர் என்று ஜுரம் வந்து இருக்கிறது. அவா டீசரிடம் லீவ் சொல்லிவிடும்மா" என்றாள்.

பானு தயங்கியவாறு மாமி! நான் அவள் ஜுரத்திற்குக் காரணம் சொல்கிறேன்; கோவித்துக்கொள்ளக்கூடாது" என்று நேற்று நடந்தது பூராவும் சொல்லிமுடித்தாள்.

இதைக்கேட்ட வனஜாவின் தாயார் சிரித்துவிட்டு, "அட, இதுதான் விஷயமா? அதான் தூக்கத்தில் ஓரே அடியாய் அலறுகிறாள்.. சரி, நீ உண்மையைச் சொன்னதற்கு ரொம்ப வந்தனம். இனிமேல் அவள் பயத்தை நான் போக்கடித்து விடுகிறேன். நீ போய்வாம்மா" என்று அன்போடு சொல்லி விட்டு, வேலையைக் கவனிக்கச் சென்றாள். எந்தவிதத்தில் அவள் பயத்தைத் தெளியவைப்பது என்பதிலேயே அவள் மூளை வேலை செய்தது. சட்டென்று பெரியாழ்வாரின் சரித்திரம் ஞாபகத்திற்கு வரவே... அந்தக்கதையைச் சொல்லி, பயத்தைப் போக்கிவிடலாம்...வனஜா எப்பொழுது எழுந்திருப்பாள்...என்று எதிர்பார்த்துக்கொண்டே இருந்தாள்.

11 மணி சுமாருக்கு வனஜா எழுந்து தாயாரைக் கூப்பிட்டாள். இரவு எல்லாம் பயத்தால் நடுங்கித் தூக்கம் இல்லாது தவித்ததால், அவள் முகம் வெளுத்து ரொம்பவும் பலஹீனமாய்க் காண்பித்தது. வனஜாவின் அம்மா சிரித்துக் கொண்டே வந்து, "வனஜா! உன் ஜுரத்தின் காரணம் பானுவால் தெரிந்துகொண்டேன். அசடே! இதற்கெல்லாமா இப்படிப் பயந்து நடுங்கிவிடுவது? நான் உனக்கு எத்தனை தடவை சொல்லி இருக்கிறேன். பெரியாழ்வாரின் "கடல் கடைந்து" என்ற பாசுரத்தைப் பாடம்செய்து இரவு படுக்கும் பொழுது தினம் சொல்லு; பயமே இருக்காது என்று. இனி யாவது பாடம்செய். உனக்கு அவருடைய கதையைக்கூடச் சொல்லி இருக்கிறேன் இல்லையா!

வனஜா:—இல்லை அம்மா! நீ, 'அவர் சரித்திரம் சொல்கிறேன்; நீ முதலில் பாசுரம் பாடம் பண்ணு'...என்றுதான் சொன்னாய். ஆனால் இதுவரை நீயும் கதை சொல்லவில்லை, நானும் பாசுரம் பாடம்செய்யவில்லை! அதனால்தான் பாடம் செய்விக்கப் பெருமாள் இப்படி ஒரு பயத்தைக் காண்பித்து இருக்கிறார்போல் இருக்கிறது.

தாயார்:—உண்மையான பேச்சு. வா! நீ சாப்பிட்டுக் கொண்டே கேள். நான் கதையைச் சொல்கிறேன்—என்றாள்.

இருவரும் உள்ளேபோனார்கள் அவள் தாயார் சாதம் போட்டுக்கொண்டே கதைசொல்ல ஆரம்பித்தாள்:

பெரியாழ்வார் ஒரு சமயம் பகவன் நாமத்தைத் தேசமெங்கும் பரப்புவதற்காக பகவானின் அழகையும் குணத்தையும் பாசுரங்களாகவே அழகாய்ப்பாடி ஜனங்களின் உள்ளத்தில் பக்திப் பயிரைச் செழிக்கச் செய்துகொண்டுவந்தார். அந்தப் பாசுரங்களின் அழகையும், அதைச்செய்து இருக்கும் அழகையும்பார்த்து ஒரு நாட்டு அரசன் அதைப்போல் தன் புகழையும், பெயரையும் வைத்துப்பாசுரம் செய்யச்சொன்னான். அதற்கு ஆழ்வார், 'பகவானைப்பாடியவாயால் மற்றவரையும் பாடமாட்டேன்' என்று ராஜா என்ற பயம்கூட இல்லாது

தாக்ஷண்யமின்றிச் சொல்லிவிட்டாராம். அந்த அரசனுக்கு ஆழ்வார்பேரில் அதிக கோபம்வந்ததாம். தன் படைகளின் சக்தியால் ஆழ்வாரை எவ்வளவோ பயம் செய்தானும். ஆனால் ஆழ்வார் எதற்கும் பயப்படவில்லையாம். சரி என்று மந்திரங்களால் க்ஷுத்திரதேவதைகளை ஏவி ஆழ்வாரைப் பிடித்துக் கொண்டுவரச்சொன்னானும். அந்தச்சமயம் ஆழ்வார் பக்தியைப்பரப்ப அந்த நாட்டைவிட்டு மற்றொரு நாட்டுக்குப் போய்க்கொண்டு இருந்தாராம். பேயும் பிசாசுமாய் வந்து ஆழ்வாரை முன்னே போகவிடாது தடுத்து மிரட்டியதாம். ஆழ்வாரா இதற்குப் பயப்படுபவர்! உடனே பகவானை நினைத்துக்கைகூப்பிக்கொண்டு இந்த 'கடல்கடைந்து' என்றபாசுரத்தைக் கெட்டியாய்ப் பக்தியுடன் சொல்லி ஒருபிடிமண்ணை எடுத்து வீசினாராம். அவ்வளவுதான்...நாலாபுறமும் நெருப்பு ஜ்வாலைவிட்டு எரியத்துடங்கியது. அந்த அனலைத் தாங்காது பேய்கள் ஒரே ஓட்டமாய் ஓடிவிட்டதுகளாம். பிறகுதான் ராஜாவுக்கு ஆழ்வாரின் பக்தி மஹிமை தெரிந்து அவனே வந்து ஆழ்வாரின் காலில் விழுந்து தான் செய்த தவறுக்கு மன்னிப்புக்கோரினானும். அதனால் நாம் அந்தப் பாசுரத்தைச் சொன்னால் பகவானே சேவகனாய்வந்து பேய், பிசாசுகளைக் கூட நம்மிடம் அணுகவிடாது நம்மைக் காப்பாற்றுவாராம். அதனால்தான் உங்களைப் பாடம்செய்யச்சொல்கிறேன். சரி, நான் சொல்லித்தருகிறேன், சொல்!

"கடல்கடைந் தமுதங்கொண்டு
  கலசத்தை நிறைத்தாற்போல்,
உடலுருகி வாய்திறந்து
  மடுத்துன்னை நிறைத்துக்கொண்டேன்,
கொடுமைசெய்யும் கூற்றமுமென்
  கோலாடி குறுகப்பெறா
தடவரைத்தோள் சக்கரபாணீ!
  சார்ங்கவிற் சேவகனே!

—(பெரியாழ்வார் திருமொழி: V – iv – 4.)

என்ற பாசுரத்தைப் பத்துத் தடவை சொல்லிக்கொடுத்தாள். வனஜாவும் பக்தியுடன் சொல்லிக்கொண்டாள்.

தாயார்:—இதோபார், வனஜா! உன் பயம் இன்னும் நன்றாய்த் தெளிய ஒரு சம்பவம் சொல்கிறேன். என் தங்கை வீட்டில் எப்பொழுதும் முனீச்வரனுக்கு ஆடி, தை மாதம் பொங்கல் இடுவது வழக்கம். அவள் மாமியார் வேண்டாம் என்று இடுவதைவிட்டுவிட்டாளாம். ஒருநாள் இரவு சித்தியை முனீச்வரன்...பொங்கல் இடப்போகிறாயா? இல்லையா? என்று மிரட்டியதாம். சித்தி முதலில் பயந்துவிட்டாளாம். பிறகு தைரியம் செய்துகொண்டு இந்தப் பாசுரத்தை உரக்கச் சொன்னாளாம். அடுத்தநிமிஷம் அந்த முனியைக் காணவில்லை

தமிழ்நாடு அவணக் காப்பக 18182

யாம்! சித்திக்கு ரொம்ப ஆச்சர்யமாய்விட்டதாம். அந்தப் பாசுரம் சொல்வதில் இன்னும் நம்பிக்கை ஏற்பட்டதாம். காலையில் எழுந்து எல்லோரிடமும் நடந்ததைச் சொல்லிப் பாசுரத்தைப்பசங்களுக்கெல்லாம் உடனே சொல்லிக்கொடுத்தாளாம். பொங்கலும் இடச்சொன்னாளாம். அதைக் கேட்டதிலிருந்து எனக்கு நம்பிக்கை அதிகம்.

இவ்வளவு நேரம்மௌனமாய் உட்கார்ந்து கேட்டுக்கொண்டு இருந்த வனஜா, துள்ளி எழுந்து, "அம்மா! இதைக் கேட்டதே எனக்குப் பயம்பூராவும் ஒழிந்து மனது நிம்மதியாய் இருக்கிறது! அம்மா! சனியன்.........அந்தப் பெண் என்னைக் குட்டை கலக்கச்செய்துவிட்டது. இனி இந்தப் பாசுரத்தைத் தவறாது சொல்கிறேன்.

தாயார்:—வனஜா! நீ சொல்வதுமட்டும் இல்லை. எந்தப் பெண் உனக்குப் பயம் கிளப்பினாளோ அவளுக்கே இந்தக் கதையைச் சொல்லி, பாசுரத்தையும் சொல்லிக்கொடுத்துப் பயத்தைத் தெளியவை. அதுதான் நீ முக்யமாய்ச் செய்ய வேண்டியகாரியம். ஏன் என்றால், அந்தப்பெண் உன்னைப் பயப் படச்செய்ததுபோல் இன்னும் யாரையாவது பயப்பட வைக்காது இருக்கவேண்டாமா?

வனஜா:—ஆமாம்மா!...காலைக்கு முதலில் பள்ளிக்கூடத்தில் என் சிநேகிதைகள் எல்லோருக்கும் இந்தக் கதையும் பாசுரமும் சொல்லிக்கொடுத்துவிட்டுத்தான் மறுகாரியம்! இதை எல்லாம் கேட்டபிறகே எனக்குப் பயம் பேய்த்தெம்பாய் இருக்கிறது.

அன்று இரவு பாசுரத்தைச் சொல்லிவிட்டுப் படுத்தாள். ஒரு பயமும் இல்லாது நன்றாய்த் தூங்கினாள். இதைக் கண்டு அவள் தாயாரும் சந்தோஷப்பட்டாள், பகவன் நாமத்தின் மகிமையை நினைத்துப் பூரித்தாள். அன்றிலிருந்து மற்றவர்களுக்கும் தைரியம் சொல்கிறாள் வனஜா என்றால் அந்தப் பாசுரத்தின் மகிமைதான் என்ன என்பது? குழந்தைகளே! எல்லோரும் இந்தப் பாசுரத்தைப் பாடம் செய்து நல்ல பயனை அடையுங்கள்.

---

யோகி சுத்தானந்தபாதியார் இயற்றிய

**காந்தி கீர்த்தனம்**

350 பக்கங்கள். ரூ. 3—8—0.

உயரிய கிளேஸ் புதிப்பு

இதைப் படித்தால் வாழ்க்கை புனிதமுறும்; சக்திபெறும்.
டி பதிப்பின் லாபம் மகாத்மாஜி சேவா சங்க
இலவசச் சம்பள நிதிக்கே

# வாழ்க்கையில் ஒரு குறிப்பு.

சுமார் 20 வருஷங்களுக்கு முன்பு நான் ஒரு சின்ன மாணவன். ஸ்ரீமதி. வை. மு. கோ. அவர்கள் குடியாத்தத்தில் ஒரு மகா நாட்டிற்கு வந்திருந்து ப்ரஸங்கம் செய்வதைக்கேட்டு ப்ரமித்துப் போனேன். பிறகு அன்றுமுதல் இன்றுவரையில் அவர்களுடைய புத்தகங்களைவிடாது படித்துவருகிறேன். மோகினியில் "வாழ்க்கையில் ஒரு சம்பவம்" எனபதுபற்றிப் புதிதாகவரும் அம்சத்தை நான் வெகு ரஸமாகப்படிக்கிறேன். நானும் அதுபோல் ஒரு முக்ய மான விஷயத்தைச் சொல்ல ஆசை தூண்டியதால் இதை எழுது கிறேன்.

நான் ஸ்மார்த்த ப்ராம்மணன்; எனக்கு மூன்று தங்கைகள்; மூன்றாவது தங்கை பிறந்ததும் என் தாயை விழுங்கிவிட்டது என் தந்தை தாலூகா ஆபீஸ் குமாஸ்தா; சொல்பசம்பளம்; அவருடன் சேர்த்து 5 பேர்கள் குடும்பம் நடத்துவதே பெரிய சிரம மாக இருந்தது. என் பிதாவுக்கு 35 வயதுகூட ஆகவில்லை. பெரியவர்கள் சேர்ந்து மறுவிவாகத்தைச் செய்துவைத்தார்கள்.

எனக்கு அப்போது 7 வயது. ஒன்றுமே விஷயம் புரியாத பாலன். எங்கப்பாவைவிட எங்க சித்தி எங்களிடம் மிகமிக அன் பாகவே இருந்தாள். எங்க சித்திக்கு ஒரு பெண்ணும் இரண்டு பிள்ளைகளும் பிறந்தன. எனக்கும் 15 வயதாகிவிட்டது. எல்லோரும் இளையாள் படுத்துகிறாளா?...என்றுகேட்டு என் சிறிய உள்ளத்தைக் கிளறுவார்கள். அதை நான் அப்படியே சித்தியிடமே சொல்லிவிட்டேன். எதனாலோ சித்தி அழுது அழுது முகம் சிவந்து வீங்கிவிட்டது. காரணம் எனக்குத் தெரியாது. எனக்கு மெட்ரிகுலேஷன் பாஸாகிவிட்டது. இந்தக் காலத்தைப்போல் அலையாமல் வேலை சீக்கிரம் கிடைத்துவிட்டது. 40 ரூபாய் சம்பளம் வந்தது. என் தாயாருடன் பிறந்த மாமன் எனக்குக் கலகம் செய்து 40 ரூபாயைப் பிதாவிடம் கொடுக்காமல் பாங்கியில் சேர்த்துவைக்கும்படிக்கு உபதேசித்தார். சுயமூளைகெட்ட நானும் அப்படியே செய்தேன். இதைப்பற்றி என் சித்தி மருந்துக்குக்கூட ஒரு வார்த்தை சொல்லவில்லை. அப்பாவும் கேட்கவில்லை. ஒரு தினம் நான் ஆபீஸிலிருந்து வந்தபோது என் சித்தியின் குழந்தைகளைக் காணவில்லை. 'எங்கே சித்தி!' என்று கேட்டேன். சித்தி மிகவும் சகஜமாய் ஊருக்குப்போயிருப்பதாகச் சொன்னாள். மூட மதியுள்ள நான் பேசாமல் போய்விட்டேன்.

சிலதினங்கள் கழிந்தன. என் தகப்பனாருக்கு ஒரு கார்டு அவர் நண்பரிடமிருந்து வந்ததைத் தற்செயலாக நான் பார்த்தேன்... இளைய மனைவியின் குழந்தைகளை சம்ரக்ஷிக்க முடியவில்லை. அவர்களால் மூத்த மனைவியின் குழந்தைகளுக்குக் குறைவு உண்டாகிறது என்பதனால், ஒரு குழந்தையை மாமனிடமும் ஒரு குழந்தையை அக்காவிடமும் ஒரு குழந்தையைத் தன பெற்றோரிடமும் அனுப்பி இருப்பது நியாயமா? மூத்தமகன சம்பாதிக்கையில் குடும்பத்தை குட்டும் கோபியமுமாய்க் காப்பாற்ற அவனுக்குப் புத்தியில்லையா? குழந்தைகள் இப்படி இருப்பது சரியில்லை. ஊரார் சிரிப்பார்கள்......

என்று ஏதேதோ எழுதியிருபபதைப் பார்த்ததும் என்னுடைய மூடத்தனம நீங்கி நல்ல புத்திவந்தது. உடனே சித்தியிடம்ஓடினேன்; அழுதேன். பாங்கியில் சேர்த்துவைத்திருந்ததை மறுநாளே வாங்கி அப்படியே சித்தியிடம் கொடுத்து மன்னிப்புக் கோரினேன். குழந்தைகளை நானேபோய் அழைத்துவந்தேன். சித்தியின் தம்பி மகளையே எனக்கு மணம்செய்துவிட்டாள். நான் பிறகு புத்திசாலியாகிக் குடும்பத்தைக் கவனிக்கும் பொறுப்பை சித்தியிடமே விட்டுவிட்டேன். குடும்பம் மிகமிக அன்யோன்யமாயிருக்கிறது. என்னைப்போல் முட்டாள் இருப்பார்களா? சித்தியைப்போல் உத்தமி கிடைப்பாளா? சென்ற வருஷம்தான் எங்கப் பாவுக்கு சஷ்டிபூர்த்தியாயிற்று. இப்போதும் எங்க சித்திக்கு நான் குழந்தைதான்!

—சிவராமன்



பாலர்
மோகினி
சிறுகதைகள்
விலை ரூ. 1.

# பக்தன்.

**தெய்வீக மாதப் பத்திரிகை.**

**தனி ப்ரதி அணா 5.**

**வருட சந்தா ரூ. 3, நன்கொடை சந்தா ரூ. 10.**

கௌரவ ஆசிரியர்:

ந்யாயவேதாந்த வித்வான் உ. வே.

ஸ்ரீ காரப்பங்காடு வெங்கடாசாரியர் ஸ்வாமி.,

நிர்வாக ஆசிரியரும், உரிமையாளரும்:

ஸ்ரீ எம். ஓ. அழகிய சிங்கராச்சாரி, பி.எஸ்.ஸி.,பி.எல்.

காரியாலயம்—71, வெங்கடரங்கம் பிள்ளைத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை (போன் 86109)

## 17

ஆசைக்கோ, அந்தஸ்திற்கோ, உத்யோகதோரணைக்கோ அல்லது அவச்யத்திற்கோ, வ்யாபார உதவிக்கோ, தடபுடல் டாம்பீக வாழ்க்கைக்கோ, எதற்கோ ஒரு காரணத்தைக் கொண்டு பலர் கார் வைத்துக்கொள்வது சகஜமாகி விட்டது. அத்தகைய கோஷ்டியினரில் சிலர் தம் குழந்தைகளைத் தடவித் தடவி வளர்ப்பதுபோல் காரையும் வெகு கனிகரமாகக் கவனித்து வளர்க்கிறார்கள்.

பின்னும் சிலரோ, கட்டைவண்டி, பஸ்ஸு, லாரி முதலியவைகளைப் போட்டு அடிப்பதுபோல் ஓட்டிப் பாழாக்கி விட்டு ஒரு வருஷத்திற்குள்ளேயே மறுபடி காரை மாற்றுவதில் ஒரு தனிப்பெருமை—கர்வம்—அடைகிறார்கள். ஒரு சிலர் தம் கார் வந்தவேளை நல்ல தசையாய்—அதிர்ஷ்டமாய்—இருக்கிறது. அதனால் அது எத்தனை பழசாகிவிட்டாலும் விடாமல் ரிப்பேர் செய்து புதுப்பித்து வைத்துக்கொள்கிறார்கள்.

ட்ரைவர்கள் காரை 50 மைல் வேகத்தில் ஓட்டினால்தான் தமது கீர்த்தி நிலைக்கும்—பெரிய புகழ் உண்டாகும்—என்ற முறையிலேயே முக்கால் வாசிபேர்கள் ஓட்டி எதிர்பாராத விதம் பல விபத்துக்களைத் தாமே வரவழைத்துக் காரையும் பாழாக்கி விடுகிறார்கள். எங்கோ ஒரு சில ட்ரைவர்கள் தனது சொந்த வண்டிபோல் பார்த்துக்கொண்டு நிதானமான ஓட்டத்துடன் காரை நன்றாகவைத்துக்கொள்கிறார்கள். முதல் சொல்லிய ரகத்தில் சேர்ந்த ஒரு சில ட்ரைவர்கள் வேண்டுமென்றே காரில் ஏதாவதொரு ரிப்பேரை உண்டாக்கிவிட்டு ரிப்பேர் செய்யும் கம்பெனிக்கு அடிக்கடி அனுப்பி அங்கு கமிஷன் பெறுவதைத் தொழிலாகக் கொள்கிறார்கள்! இது வெறும் கட்டுக்கதை வார்த்தையல்ல; ப்ரத்யக்ஷமாய் அனுபவித்துச் சொல்லும் உண்மையுரையாகும்!

சொந்தக்காரர்களே காரை ஓட்டுவதில் அபார உத்ஸாகத்தையடைந்து பெரியபெரிய விபத்துக்களில் சிக்கிப் பணத்தினால் தப்பித்துக் கொள்ளும் வேடிக்கைகளையும் பார்க்கிறோம். சேகரனின் மாமனாரால் கார் கிடைக்கப் பெற்றதும் காரைக் குழந்தைபோல் தடவி வளர்க்கும் சுபாவம் பெற்று

இருந்தான். இவனுக்கு அமைந்த ட்ரைவரும் அப்படியே நல்ல நிதானத்துடன் ஓட்டும் சுபாவம் பெற்றிருந்ததால் கார் சாதாரணமாய் 25 மைல் வேகத்தில்தான் போய்க்கொண்டிருந்தது. மீனாக்ஷியம்மாளின் மனத்துடிப்பின் வேகத்தைக் கார் வேகம் ஜெயிக்க முடியாது பின்னடைவதாக எண்ணி, "சேகர்! சீக்கிரம் போகச்சொல்லேன். கட்டை வண்டிபோல் நகர்கிறதே" என்று மெல்லக் கூறினாள்.

சேகருக்குத் தன் தாயார் செய்துள்ள அசட்டுத்தனத்தின் வேகம், கோபம்கோபமாக வந்ததால், பதிலே பேசாமல் உட்கார்ந்திருந்தான். அவன் பிதாவுக்குக் கோபம் வந்துவிட்டது. "ஆமாம்! வேகமாய்ப்போய் விபத்தை விலைக்கு வாங்கச் சொல்கிறாயா?......நீ பெண் வளர்த்த சவரணையின் அலங்கோலந்தான் நன்றாகத் தெரிந்துவிட்டது! எந்த நிலைமையில் உன்னுடைய மகளைக் காணநேருமோ என்று என் நெஞ்சு கொதிக்கிறது!.....இந்நிலையில் காரை வேகமாக ஓட்டி முட்டிக்கொண்டு காரையும் உடைத்து விபத்தையும் வரவழைக்கச் சொல்கிறாயா?......என்று கத்தினார்.

அதேசமயம் ஒரு தெருவைத்தாண்டி இன்னொரு தெரு வழியே கார் திரும்பவேண்டும்; ட்ரைவர் ஹாரனை அடித்தபடியே வெகு ஜாக்ரதையாய்ப் போகும்போது எதிரில் ஸினிமாநக்ஷத்திரம் உத்திராதேவி கண்ணுமண்ணுதெரியாத வேகத்தில் தானே ட்ரைவ் செய்துகொண்டுவந்து இந்தக் கார் மீது மட்டாரென்று மோதியடித்துக்கொள்ள, எக்கச்சக்கமாய் அதே கார் ரோட் ஓரத்தில் உள்ள விளக்குக் கம்பத்தருகில் சென்றுஇடித்து கால்வாய்பக்கம் சாய்ந்துவிட்டதுதான் தாமதம்... பூகம்பத்தில் உலகமே அதிர்வதுபோல் ஒரு மகத்தான பயங்கர அதிர்ச்சியுடன் கூட்டம் கூகூ வென்று கத்தியவாறு கூடிவிட்டது.

காரில் கதிகலங்கிப்போய் உட்கார்ந்துள்ள மீனாக்ஷியம்மாளை இந்தப் பயங்கரமான அதிர்ச்சியும் கார் மோதிய தாக்குதலும் ஒன்றுகூடிப் பெரியதாக அலறச்செய்துவிட்டது. "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்கிற பழமொழிப்படிக்கு சேகரன்காரை மெதுவாக ஓட்டிவந்த கெட்டிக்கார ட்ரைவர் எப்படியோ சாமர்த்யமாய்க் காரை ஒதுக்கி 'ஓடித்து' தைரியத்துடன் ஓட்டியதால் ஒரு பக்கத்துச் சக்கரத்தில் இடிபட்டு அந்தக் காருக்கே விபத்தை உண்டாக்கிக் கொள்ளும்படியாய் சந்தர்ப்பமும் அமைந்துவிட்டது. எனினும் ட்ரைவருக்குச் சிறிது அடிபட்டுவிட்டது. சேகரன் எப்படியோ துணிகரமாய் வெளியே குதித்துவிட்டான். உள்ளிருந்த இரண்டுபெண்களுக்கும் பெரியவருக்கும் ஒரு அதிர்ச்சியுடன் சிறிது சிறிது காயமும் உண்டாகியது.

தெருவிலுள்ள ஜனங்கள் ஒரே இறைச்சலாகப் பேசியபேச்சுக்கள்பலவிதமாய்த் தெரிவித்துக் குழப்பத்தைக்கொடுத்தது. சேகரின் காரும் அதேவேகத்தில் வந்திருந்தால்இரண்டு காரில் உள்ளவர்களும் ஒரே க்ஷணத்தில் கூண்டோடு கைலாஸம் போயிருப்பார்கள்! அந்த கார் ஹாரனடித்தபடியே மிகவும் மெதுவாக வந்ததனுல்தான் தப்பித்துக்கொண்டது...என்கிற வார்த்தை ஒரே முகமாய்க் கிளம்பியது.

ஸினிமாராணி உத்திராதேவிதான் காரை அதிகமான வேகத்தில்—அதிலும் தெருவு திருப்பத்தில்—ஓட்டியதால் இத்தகைய விபரீதவிளைவு அந்தக் காருக்கே ஏற்பட்டுவிட்டது! "ஐயையோ! ஸினிமாராணியா அடிபட்டுவிட்டாள்?"...என்று சில குரல்கள் அலறின.

"பலேபேஷ்! சினிமாவில் இப்படியொரு கட்டம் ஏதாவதொரு விஞசம் என்கிற கதைப் படத்தில் வருகிறதோ என்னவோ!...அதற்காக இது ஒத்திகையோ என்னமோ!...அடேடே! பக்கத்தில்சினிமாராஜாவுடன்ஸிகரேட்டைப்பிடித்தவாறு தலைதெறிக்கும்வேகத்தில் வந்த பலனுஇது? வேணும்! வேணும்! குடிகெடுக்கும் காதலிக்குச் சரியான பரீக்ஷைதான்! கட்டிய கணவனைவஞ்சித்த மூதேவிகளுக்கு இதைவிட வேறு என்ன பரிசுகிடைக்கக்கூடும்? பிறந்தகுலம் புகுந்தகுலம் சகலத்தையும் நாசம்செய்துவிட்டுவந்த தரித்திரமூதேவிக்குச் சரியானபடிதான் பகவான் கொடுத்தான்...என்று ஆர்ப்பரித்தன சில சில குரல்கள்.

இப்படியாக வீதியே அல்லகல்லோல அலங்கோலமாகி விட்டது! சினிமாராணியின் மீதுதான் குற்றம்; இந்த ட்ரைவர் மீது குற்றமே இல்லை...என்று பொதுமக்கள் ஒரே முகமான வாக்கைக்கொடுத்து ஊர்ஜிதமாகப் பேசியதால் போலீஸாரின் தடபுடலும் கேள்வி விசாரணைகளும் சுருக்கமாக முடிந்தன. எதிர்பாராது நேர்ந்த இந்த விபத்தின் அதிர்ச்சி சினிமா விசிரிகளின் வட்டாரங்களிலும், சினிமா நக்ஷத்திர மண்டலங்களிலும், சினிமாத்தொழிலில் சம்மந்தப்பட்டுள்ள எல்லோரிடமும் பெரும் கிளர்ச்சியை உண்டாக்கிவிட்டது. சினிமாராணியை உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றூர்கள்.

சினிமா ராணி காரில் அடிபட்டுக்கிடந்த கோலத்தைப் பல புகைப்படப்பெட்டிகள் 'க்ளிக்கு, க்ளிக்கு' என்று பிடித்துக் கொண்டு பறந்தன! உத்திராதேவி நடித்துவரும் சினிமாக் கம்பெனிக்கு இந்த விஷயம் தெரிந்ததுதான் தாமதம்...குடி முழுகிவிட்ட மனக்கொதிப்புடன் பறந்துவந்தார்கள்.

இத்தகைய மகத்தான பயங்கரமும் அபசகுனமும் உண்டாகிவிட்டதைக் கண்டு சேகரின் இதயமும் துணுக்குற்றது. எந்த ஒரு மகானின் வீட்டிற்குப்போகிறேமோ அவருடைய

மனைவி என்கிற பிசாசின் மூலமாகவா இத்தகைய விபரீதம் நடந்து தாமதத்தையும் வீண்போலீஸ் உபத்திரவத்தையும் உண்டாக்கிச் சோதிக்கவேண்டும்!....என்ற வருத்தத்துடன் மறுபடியும் காரைச் சிறிது சரிப்படுத்திக்கொண்டு கிளம்பிச் சென்றான். வனஜா எந்த நிலைமையில் காட்சிகொடுக்கப் போகிறாளோ?...என்கிற திகிலே எல்லாரையும் பாதித்தது.

தனக்குக் கீழ்ப்பட்ட உத்யோகஸ்தனாகவிருப்பினும் ஏதோ தன்னையறியாத ஒரு பற்றுதல் மனத்தில் ஏற்பட்டு உணர்ச்சிவயமாக்கி விட்டதால் பாஸ்கரனுக்கு தனது கண்ணியத்திற்கும், உத்யோகத்திற்கும் குறைவு என்பது தெரிந்திருந்தும் தனது சுயசரிதையைக் கூறியதோடு வனஜாவையும் கொண்டு வந்து தன் வீட்டில் வைத்து, சேகரனுக்கு உதவிசெய்ய முன்வந்து சந்தோஷப்படுகையில், இம்மாதிரி, 'அந்தப் பெண்களைக் காணவில்லையே!' என்கிற அதிர்ச்சி அவரைப் பலமாக வாட்டிவிட்டது. தனது மனைவியின் பாதகச் செயலுக்கு இந்தச் சிறுமியும் எங்கே பலியாகி விடுவாளோ?...என்கிற ஒரே ஆத்திரத்தினால் செய்த காரியம் எப்படியோ எக்கச்சக்கமாகி விட்டதே! சேகர் வந்தால் என்ன பதில் சொல்வது?...என்கிற ஏக்கம் பிடித்து விட்டதால், தனது ப்ரைவேட் காரியதரிசியை அழைத்து, "மிஸ்டர் மூர்த்தி! சேகர் வந்து விடுவாரே இப்போது; நாம் என்ன செய்வது? அந்தப் பெண்கள் எப்படி மாயமாய் மறைந்து போயிருக்கக்கூடும்? அடுத்த சந்துக்கள் தெருக்கள் முதலிய இடங்களில் பார்த்தீர்களா? ஆட்களை யனுப்பினீர்களா?......" என்று வருத்தம் தேங்கக் கேட்டார்.

மூர்த்தி:—ஸார்! நானே நேரில் போய் சில இடங்களில் பார்த்தேன். நடந்து போயிருந்தால் கட்டாயம் கிடைத்திருக்கலாம். ரிக்ஷாவோ, டாக்ஸியோ, ஏதோ வண்டியில்தான் போயிருக்கவேண்டும். இல்லாவிடில் இத்தனை விரைவில் கண் காணாமல் மறைந்திருக்கமுடியாது. பின் பக்கத்து வீதியிலிருந்த இரண்டு ரிக்ஷாக்காரர்களைக் கேட்டேன்; கையில் காயக்கட்டுகளுடன் இரண்டு பெண்கள் வெகுவேகமாய் இந்த வழியேதான் போனார்கள்......என்று சொன்னார்கள்; நமது வேலைக்காரனை அதே தெருவில் பார்த்துக்கொண்டு வரும்படி அனுப்பியிருக்கிறேன்—என்றார்.

அதேசமயம் சேகரின் கார் வந்து விட்டதை யறிந்ததும் பாவம்! எஜமானரின் மனது கலங்கித் தவித்தது! தான் எத்தகைய பதிலைச் சொல்லி சமாதானப்படுத்துவது? நல்லது செய்ய எண்ணி விபரீதத்தில் முடிந்துவிட்டதே!...என்கிற திகிலுடன் முகத்தில் ஈயாடாமல் "வாருங்கள்" என்று ஒப்புக்கு வரவேற்கத் தயாராய் வாசலுக்கு வந்தார்.

சேகர் ஒரு விதத்தில் முகத்தில் களையின்றிச் சுருங்கிப் போயிருந்த உணர்ச்சியுடன், "ஸார்! மன்னிக்கவேணும்: நாம் ஒன்று நினைக்கக் கடவுள் ஒன்று நினைக்கிறார்! கோரமாகி விட்டதற்கு மன்னிக்கவேணும். வரும்வழியில் எதிர்பாராத விதம் அந்தப் பாதகியின் காரினாலேயே பெரிய விபத்து உண்டாகித் 'தலை தப்பியது தம்பிரான் புண்யம்' என்றாகி விட்டது! அவளுக்கு நல்ல அடிபட்டு ஆஸ்பத்ரிக்குக்கொண்டு போயிருக்கிறார்கள். போலீஸ் உபத்திரவங்களுக்கு ஜவாப் சொல்லிவிட்டு வந்தோம்...

என்றதைக் கேட்ட எஜமானருக்கு.........என்ன! அந்த மூதேவியினால் உங்களுக்கு விபத்தா?...பகவானே! இந்த விபரீதத்தினால் ஒரு முடிவைக்கொடுத்துவிட்டால் உலகம் க்ஷேமமடையும்...என்று தன் உணர்ச்சி பொங்க உரத்துக் கூறிவிட்டார். உள்ளுக்குள்ளே உதைக்கிறது. இந்தப் பெண் களைப்பற்றி என்ன விதமான சமாதானம் சொல்வது?...என்று விழிக்கும்போது,இவருடைய வேலைக்காரன் ஓடிவந்து மூர்த்தியிடம், "சார்! அந்த ரெண்டு பொங்களும் ஒரு காரிலே எங்கேயோ சினிமாக்காரி அடிபட்டுக் கடக்கற ஆஸ்பத்திரிக் குப் போயிட்டாங்க. முத்துப்பேட்டைபக்கம் வண்டி போயிடுச்சுங்க" என்றான். இதைக் கேட்ட கிருஷ்ணமூர்த்தி விஷயத்தை எஜமானர் காதோடு சொன்னார்.

சேகர் சொல்லிய விஷயமும் ரிக்ஷாக்காரன் சொல்லியதும் ஒன்றாகிவிட்டதால் இனி தாமதிக்காமல் விவரத்தைவெளி யிட்டுவிடவேண்டும் என்று தீர்மானித்தவராய், "மிஸ்டர் சேகர்! இந்த வீடு ஒரு சன்யாசி ஆச்ரமம் போன்றது. உமது தாயாரையும் மனைவியையும் வரவேற்க யாருமில்லை. அதோடு ஒரு பெரிய ஏமாற்றம் திடீரென்று உண்டாகி என் னைக் கலக்கிவிட்டது. உமது சகோதரியை இங்குக் கொண்டு வந்துவைத்து ஆகாராதிகளைக் கொடுத்தபிறகே உமக்கு டெலிபோன் செய்தேன். அவர்கள் இந்த வீட்டைப்பற்றியும் மற்றதைப் பார்த்தும் என்ன நினைத்து எப்படி முடிவுசெய் தார்களோ! ஒரு க்ஷணத்தில் புழக்கடைப் பக்கமாய் சென்று மறைந்துவிட்டிருக்கிறதைக்கேட்டு திடுக்கிட்டு கதிகலங்கிப் போய் நாலாபக்கமும்தேடச்செய்ததில்சினிமாக்காரியின்விபத் தையறிந்து ஆஸ்பத்திரிக்குப் போயிருப்பதாக இப்போது தான் ஒரு ரிக்ஷாக்காரன் தகவல் கொடுத்துச் சென்றான். தயவுசெய்து என்னை மன்னித்துவிட்டு நீங்கள் உடனே அந்த ஆஸ்பத்திரிக்கு ஓடிப்போய் அந்தப் பாவியை இப்பெண்கள் பார்ப்பதற்குமுன் இழுத்துக்கொண்டு வாருங்கள். அதுவரை யில் உங்கள் பெற்றோர்களும், மனைவியும் இங்கிருக்கட்டும்" என்று ஏக்கமும், ஏமாற்றமும் த்வனிக்கும் குரலில் சொன்னார்.

எத்தனையோ நடுநடுங்கிக் கொண்டிருந்த சமயம் தங்கை கிடைத்துவிட்ட நற்செய்தியைக் கேட்டுச் சந்தோஷத்துடன் ஓடிவந்த இடத்தில் மறுபடியும் திடீர்பூகம்பம் தோன்றி வதைப்பதுபோன்ற அதிர்ச்சி உண்டாகச் சேகரன் இடிந்தே போய்விட்டான். தன் தங்கையை அப்படியே அடித்து நொறுக்கிவிடலாமா?...........என்ற மகத்தான ஆத்திரம் உண்டாகி உடம்பே பற்றி எரிவதுபோல், அனல் வீசியது. எங்கேயோ விபத்து நேர்ந்திருக்கும் விஷயம் இதற்குள் காற்றுப்போல் இத்தனை தூரம் கம்பி இல்லாத் தந்தியில் எப்படி வெளிவந்திருக்கிறது! நல்ல விஷயமாயின் நாட்கணக் காணாலும் வெளியாவதில்லை. இத்தகைய தீப்போன்ற உதவாக் கரை விஷயம் பாவி இந்தப் பீடைகளின் காதுகளில் விழுந்து எப்படித் துணிச்சல் உண்டாகி, 'இளங்கன்று பயமறியாது' என்கிறபடி ஓடிவிட்டதுகள்! இந்தச் சனியன்களை எந்த ஆஸ்பத்திரியில் தேடுவது?'' என்று குழம்பிப்போய் பதிலே பேசமாட்டாது நின்றுவிட்டான்.

அங்குச் சலவைக்கல்லில் காட்சியளிக்கும் ஸ்ரீ க்ருஷ்ண பிம்பத்தைப் பார்த்ததும் அந்த அத்புத திவ்யதேஜஸ்ஸில் ஈடுபட்டுத் தன்னை மறந்த நிலையில் பார்த்துப் பூரித்து நிற்கும் லக்ஷ்மிக்குத் தான் வந்த காரியமே மறந்துவிட்டது. நாத்த னாைப் பார்க்கவேண்டுமென்று வந்த துடிதுடிப்பும் அடங்கி, ''என்ன அழகு! என்ன கம்பீரம்!'' என்று ப்ரமிக்கும் நிலைமையில்,

'நெத்தியில் திலகமாட'......

என்கிற பாசுரத்தின் அடிகள் அவளையறியாது வாயிலிருந்து மெல்ல வெளிப்பட்டன. எத்தகைய மனிதருக்கும் அழகிய— கவர்ச்சிகரமான—பொருளைப் பார்த்தவுடன் ப்ரமிப்பு உண்டா வதும் அந்தப் பொருளில் தன்னை அறியாது லயித்துப்போவ தும் சகஜம். பக்தியற்று சூனிய இதயமுள்ள நாஸ்திகனுக்குக் கூட விசாலநோக்குடன் கூடிய பக்திப் பரவசம் உண்டாகாவிடி னும் ஸௌந்தர்ய சோபையின் அழகு காந்தம்போல் இழுத்துப் பிரமிக்கச் செய்துவிடும் என்பது ப்ரத்யட்ச உண்மையாகும். அங்ஙனமிருக்க பக்தியிலேயே உள்ளம் ஊறித்தோய்ந்து போயிருக்கும் லக்ஷ்மி ஆழ்ந்திருப்பதில் ஒரு வியப்பா?

மீனாக்ஷியம்மாள் பகவானின் சிலையையாவது கண்ணால் பார்த்தாளோ இல்லையோ, ஒரு ஒதுக்குப் புறமான இடத்தி லிருந்த சோபாவில் அமர்ந்து கண்மூடி மவுனிபோலாகி விட்டாள். அவள் கணவர் மட்டும் மகனுடன்கூடவே நின் றிருந்ததால் சகல விஷயங்களையும் புரிந்துகொண்டார். முதலில் தன் மனைவியின்மீது அடங்கா ஆத்திரம் பொங்கி எழுந்தது. தான் எத்தனை சொல்லியும் கேளாமல் அடங்காப்

பிடாரித்தனமாய்த் தானும் கெட்டுத் தன்மகளையும் குட்டிச்சுவராக்கிவிட்ட கொடுமை புகைந்து புகைந்து எரிச்சலைக்கிளப்பியதால் பல்லை நறநறவென்று கடித்துக்கொண்டு கண்மூடித்தவம் செய்யும் அம்மாளை ஒரு விறைப்பு விறைத்துப் பார்த்தார். இந்தப் பரிபவபுத்தி உண்டாகித் தீப்போல் வளர்ந்ததற்கு ஓரளவு தன் மகனும் காரணம் என்று தெரிந்தும் அதை உத்யோகஸ்தர் முன்பு கூறி மதிப்பைக் குறைக்கப் பிரியப் படவில்லை......

சேகர், ப்ரமிப்பும் கோபமும் அடைந்து நிற்கும்நிலையைக் கண்டு, அவன்பிதா, "சேகர்! நான் ஒரு டாக்ஸியில் இவர்களை அழைத்துக்கொண்டு வீட்டிற்கே போகிறேன். நீ எந்த ஆஸ்பத்திரியில் அந்த மூதேவி கிடக்கிறது என்பதை டெலிபோனில் விசாரித்துக்கொண்டு நேரே சென்று இந்தப் பீடைகளை இழுத்துக்கொண்டு வந்துவிடு. நம்மால் இத்தனை துன்பங்கள் இவர்களுக்கு உண்டாகிவிட்டதை எண்ணி வருத்தப்படுகிறேன்; மன்னிக்கவேணும்"...என்று பொதுவாகக் கூறிவிட்டுத் தமக்கு டாக்ஸி கார் கொண்டுவரும்படி அங்கிருந்த வேலையாளிடம் சொல்லியனுப்பினார்.

சேகருக்கு யாரிடம் என்ன பேசுவது என்றே தோன்றாத ஆத்திரம் பீறிக்கொண்டு வந்த ஆவேசத்துடன் ஆஸ்பத்திரிக்கு போன் செய்து எந்த இடத்தில் உத்திராதேவி இருக்கிறாள் என்பதைத் தெரிந்துகொண்டபின், "ஸார்! என்னால் உங்களுக்கு வீணான அலைச்சலும் கவலையும் உண்டாகிவிட்டதைக் குறித்து மிகமிக வருத்தப்படுகிறேன். மன்னிப்பைக் கோருவதைத் தவிர, வேறு ஒன்றுமில்லை. நான் போய்ப் பார்த்துவருகிறேன். இத்தகைய ஒருநிலை ஏற்படுவதற்கு என் தாயாரும்...ஏன்?...நானுமேதான் காரணம் என்றதை என்னிதயம் இப்போதுதான் அறிந்து வருந்துகிறது. இதை உணரச் செய்தவள் என் உத்தம மனைவிதான், போய் வருகிறேன்." என்று சொல்லிவிட்டு, லக்ஷ்மி ஐக்யமாய் நின்றிருந்த இடத்திற்கு வந்து, "லக்ஷ்மீ!" என்று கூப்பிட்டான்; பதிலே பேசாமல் தன்னை மறந்து நிற்கும் பக்தியைக் கண்டு பூரித்த சேகர், "லக்ஷ்மீ!" என்று உரத்துக் கூப்பிட்ட போதுதான் அவள் தன்னுணர்வு பெற்றுத் திடுக்கிட்டுத் திரும்பியவாறு, "மன்னிக்கவேண்டும்: பெரியவர்கள் சொல்கிறபடி, ஆழ்வார்களும் அடியார்களும் அனுபவித்துக் கூறியுள்ளபடி, இந்த திவ்யமங்கள விக்கிரகத்தின் சோபையாகிய தடாகத்தில் நான் மூழ்கியிருந்ததால் நாம் வந்த காரியத்தை அடியோடு மறந்தே போய்விட்டேன்; வனஜா எங்கே?" என்று கேட்டாள்.

வெறுப்பும் நிராசையும் கலந்த முகத்துடன் சகல விஷயத்தையும் கூறிவிட்டு, "லக்ஷ்மீ! நீ அம்மா அப்பாவுடன்

வீட்டிற்குப்போ! நான் ஆஸ்பத்திரிக்குச் சென்று அந்த நாய்களை இழுத்துக்கொண்டுவருகிறேன்'' என்றான். சேகரனின் கோபத்தைக் கண்களே மோட்டாரின் சிகப்பு விளக்குகள் போல எடுத்துக்காட்டுவதைக் கண்ட லக்ஷ்மிக்கு மனது துணுக்குற்றது. ஆஸ்பத்திரியில் பலபேர் முன்னிலையில் என்ன சொல்லிவிடுவாரோ? எப்படி நடந்து கொள்வாரோ? அதனால் இன்னும் என்னென்ன விபரீதங்கள் நிகழுமோ?...... என்கிற பயம் உண்டாகியதாலும் தானும் கூடச்சென்று அழைத்து வருவதுதான் உத்தமம்...என்று தோன்றியதாலும் "ஸ்வாமீ! நானும் கூடவருகிறேன், என்னதான் கூடப் பிறந்தவராக இருப்பினும் இந்த நிலைமையில் உங்களைப் பார்த்தவுடன் நடுநடுங்கிப் பயந்து தவிக்கும் போது ஒருவேளை மறுபடி எப்படியாவது தப்பித்துக்கொண்டு ஓடிவிடவும் மனம் துணிந்துவிடலாம்.........அல்லது அதிர்ச்சியில் மயக்கமே உண்டாகி விபரீதமாகவும் முடியலாம். அதற்கெல்லம் இடங் கொடுக்காமல் தயவுசெய்து என்னை யழைத்துப் போகும்படி வேண்டுகிறேன்'' என்று நீதியாய்ச் சொல்லியதால், மறு பேச்சின்றி, "சரி, வா போகலாம்!'' என்று அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

லக்ஷ்மியைக்கூட அழைத்துச் செல்வதை எஜமானரும் சேகரின் பிதாவும் மனப்பூர்வமாய் ஆமோதிப்பதை அவர்களுடைய முகங்களே எடுத்துக்காட்டின.

---

## 18

சொர்க்கம், நரகம் என்றெல்லாம் கண்ணால் பார்க்காத உலகங்களைப்பற்றிப் புராணங்களும் இதிகாஸங்களும் கூறுவதைப் படித்தும் கேட்டு அறிகிறோமேயன்றி உண்மையில் அவைகளை ஓரளவு ப்ரத்யட்சமாய்ப் பார்க்கவேண்டுமானால் ஒரு பெரிய ஆஸ்பத்திரிக்குள் சென்றால் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் பார்த்துவிடலாம்! இந்த அபிப்ராயத்தை எல்லோரும் ஒரு முகமாக ஒப்புக்கொள்வார்கள் என்றுதான் நினைக்கிறேன்.

ஸாவித்திரி - சத்யவான் நாடகத்தைப் பார்க்கும்போது யமனுடைய தர்பாரும் நரகத்தின் பயங்கரமும் யமபடாக்களின் தடபுடல் தாண்டவமும்காட்டி மரண பயத்தை உண்டாக்கி...பக்தியினால்போக்கி...மக்களின் ஆஸ்திகத்தை வளர்த்துவச்சரிப்பார்கள்! நாடகமோ,பாத்திரங்களோ,எதுவுமே இல்லாமல் யமதர்பார், நரகபயங்கரம், நரகவேதனை, யமபடாக்களின் கடிபுடி... முதலிய சகல வைபவங்களையும் காணும்போது ஸ்மசான வைராக்யம், புராண வைராக்யம், ப்ரஸூதி வைராக்யம்...என்கிறபடி உண்டாவதும் பிறகு பாசி

போல் விலகி அஜ்ஞானம் மூடுவதும் சகஜம்! உணர்ச்சியே அற்ற வரண்ட மனிதர்களை இத்தகைய ஆஸ்பத்திரிகளுக்கு அழைத்துவந்து காட்டிவிட்டால் போதும்! மனிதர்களே மாறிவிடுகிறார்கள்!...

நோயாளிகளின் அவஸ்தையும் அலறலும் டாக்டர்களின் அட்டகாஸமும் சில நர்ஸுகளின் அழுத்தலும் ஸ்டாப் நர்ஸுகளின் அதிகாரமும் நோயாளிகளைச் சேர்ந்தவர்களின் பரிதாபமும்... அப்பப்பா!...சொல்லவேண்டாம்!... இதே இடத்தில் நோயாளிகளாய் வந்து குணப்பட்டுத் தேறியுள்ளவர்களின் சந்தோஷமும் அதையொட்டியே மற்றய விஷயங்களும் சொர்க்கபோகமாகவே ஒருபுறம் தோன்றும்.

அத்தகைய உலகத்தின் வாசலில் எள்ளைப்போட்டால் எள்ளு விழாதபடி பொதுஜனங்கள், சினிமா விசிறிகள், சினிமாவைச்சேர்ந்த சகல தொழிலாளர்கள் உள்பட, தேர்க்கூட்டம் திருநாள் கூட்டமாகச் சேர்ந்துவிட்டது. "சினிமாராணி உத்திராதேவிக்குக் கை உடைந்துவிட்டதாமே!......கால் உடைந்துவிட்டதாமே!...உயிரே போய்விட்டதாமே!...... பிழைக்கமாட்டார்களாமே!.. அடாடா! சினிமா வானமே இருண்டுவிட்டதே!...வேணும்!...வேணும்!....செய்யத்தகாத பாதகத்தைச் செய்து குடியைக் கெடுத்த நாய்க்கு நன்றாக வேணும்!....ஆகா! எத்தனை அருமையான குடும்பத்தில் பிறந்தாள்!...அதிசயிக்கத்தக்க இடத்தில் புகுந்தாள்!...மன்மதனைப்போன்ற புருஷன்! மகத்தான கண்ணியமும் பதவியும் வாய்ந்த புருஷன்! அவனுடைய மதிப்பையறியாது இத்தகைய தொழிலை ப்ரமாத போகபாக்யம் என்று எண்ணிக் கற்பை இழந்து காரி உமிழும் வழிக்குவந்த தன்பலன் இது! நன்றாக வேண்டும்!... ஐயோ! 50 ஆயிரம் அட்வான்ஸ் கொடுத்துவிட்டேனே!...லக்ஷ ரூபாய்க்குப் பேசி 25 ஆயிரம் அட்வான்ஸ் கொடுத்துவிட்டேனே!......எங்கள் கதி அதோகதியாகி விட்டதே!...என்று பலபல குரல்கள் பலபலவிதம் பேசித் தம்தம் மனத்தைத் திறந்துகாட்டுகிறதுகள்!

சேகரின் கார் உள்ளேபோகவே இடங்கிடைக்கவில்லை, ஹாரன் செய்தபடியே கேட்டருகில் நின்றுவரும்போது மேல்குறித்த குரல்கள் கேட்கக்கேட்கச் சேகரின் உள்ளத்தில் தான் இதுவரையில் எண்ணியிருந்த முட்டாள்தனத்தின் அவமானம் நன்றாகத்தெரிந்து ஆத்திரமுறச் செய்தது. இந்தக் கும்பலில் இந்தச் சனியனை எப்படிக் கண்டுபிடிப்பது?...என்று குழப்பத்துடன் எட்டிப்பார்க்கையில், கேட்டில் யாரையும் விடமாட்டேன் என்று பூட்டிவிட்டுத் தடுத்துக் கொண்டிருக்கும் கம்பிக்கருகில் நிற்கமாட்டாது கம்பியை பிடித்துக்கொண்டு கெஞ்சும் கூட்டம் கணக்கிடமுடியவில்லை.

இந்தக் காருக்குமுன்னால் சுமார் 20–25 கார்கள் நகரவும் இடமின்றி நிற்பதையறிந்த லக்ஷ்மி, 'ஸ்வாமி! காரை நிறுத்தி விட்டு ட்ரைவரையனுப்பி முன்னால் நிற்கும் காரில் இருக்கிறார்களா என்று பார்த்துவரச் சொல்லுங்கள்'' என்றாள். உடனே காரை ஒருபுறமாக ஒதுக்கி நிறுத்திவிட்டு, ட்ரைவர் அக்கூட்டத்தில் நீந்தியடித்துக்கொண்டுபோய் ஒவ்வொரு காராகப் பார்த்தான்.

ஏழெட்டு காருக்கு முன்பு ஒரு காரில் ஒரு சினிமாக்காரனுடன் இந்த இரண்டு பெண்களும் உட்கார்ந்திருப்பதைக் கண்டு திடுக்கிட்ட ட்ரைவர், பதைக்கப்பதைக்க ஓடிவந்து, ''ஸார்! சினிமா முதலாளியும் நடிகருமான ராமசாமியுடன் காரில் உட்கார்ந்திருக்கிறார்கள். என்னையவர்கள் பார்க்காதபடி நான் பார்த்துவிட்டு வந்தேன்'' என்றதைக் கேட்டதும், சேகருடைய கோபமும் துடிதுடிப்பும் நூறுமைல் வேகத்தில் செல்லும் காருக்கும் மிஞ்சிவிட்டது என்னலாம். ''சினிமாக் காரனுடனா உட்கார்ந்திருக்கிறாள்?...சினிமாக்காரனுடனா!''... என்ற கேள்வி பாணம்போல் மேலேமேலே ஒலித்து அவன் இதயத்தைச் சுக்கல் நூறாகச் சிதறவடிக்கின்றது!

லக்ஷ்மிக்கும் மனம் துணுக்குற்றது. கணவனின் காலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, ''ஸ்வாமி! நீங்கள் கூட வாருங்கள். நான் அவர்களை அழைத்து வந்துவிடுகிறேன். கூட்டத்தில் ஒன்றுமே கோபப்பட்டுச் செய்துவிடாதீர்கள். காரியம் கெட்டுவிடும். அவமானமாகிவிடும்'' என்று கெஞ்சிக் கேட்டபடியே தான் முதலில் இறங்கிவிட்டாள்.

முன்னால் ட்ரைவர், பின்னால் லக்ஷ்மி, அதன்பின்னால் கண்களில் தீப்பொறி பறக்க சேகர் மூவரும் சென்றார்கள். அவர்கள் வீற்றிருந்த காரைக் காட்டிவிட்டு தூர நின்றான் ட்ரைவர். கேட்டுதிறக்குமா என்பதையே பார்த்துக்கொண்டிருந்த வனஜாவும் கிரிஜாவும் ட்ரைவரைப் பார்க்கவேயில்லை. லக்ஷ்மியை அந்த சினிமாக்காரனின் முன்பு போகவிடுவதற்கு சேகர் ப்ரியப்படாததால் சடக்கென்று தானே முந்திக் கொண்டு காரின் அருகில் சென்று ''இறங்குங்கள்!'' என்று ஸிம்மம் கர்ஜிப்பதுபோல் கர்ஜிப்பதையும் கண்களில் நெருப்புக்கக்கும் ஜ்வாலை வீசுவதையும் ஒரே க்ஷணத்தில் கண்டுவிட்ட வனஜாவின் தலைமீது வானமே இடிந்து விழுந்து விட்டதுபோலான அதிர்ச்சி உண்டாகி ''ஹா!''...வென்று தன்னை யறியாது கூவிவிட்டாள்......கிரிஜாவின் கண்கள் சுழன்றன!

பக்கத்தில் உட்கார்ந்துள்ள சினிமாக்காரன்...''ஹி! ஹி! ...நம்மநக்ஷத்திரம் உத்திராதேவிக்குப் பெரியவிபரீதவிபத்து உண்டாகிவிட்டதுங்களே!...எந்த மடயனோ காரை எதிரில் ஓட்டிவந்ததனால்...என்றுமுடிக்குமுன் 'எர்கற கொள்ளியை

ஏறத் தள்ளி எண்ணெயும் வார்த்ததுபோலான' ஆத்திரம் பீறிக்கொண்டு வந்த சேகரன், ஒரு முழி முழித்துப் பார்த்துப் பல்லை நெறுநெறுவென்று கடித்தபடியே "உம்! மூதேவி! இறங்கு!" என்று ஒரு வெடிகுண்டு வீசுவதுபோல் கூறினான்.

"ஸார்! கோபிக்காதேங்கோ ஸார்! ஸினிமாராணியைப் பார்க்கவேண்டி துடியாய்த்துடிக்கும் ஆயிரக்கணக்கான ஜனங்களைப்பாருங்கள், ஸார்! இந்த இரண்டு அபிமானிகளும் தெருவில் நின்று தியங்கும்போது, நான் அவ்வழியே வருகையில் கூட அழைத்துவந்தேன். இன்று காலையில் இவர்களை உத்திராதேவி வீட்டில் சந்தித்தேன் ஸார்! அதனால் அழைத்துவந்தேன்." என்று தானே சொல்வதைச் சேகரன் காதில் வாங்கவே இல்லை.

அந்த நடிகனின் முகத்தைப் பார்த்தாலே எரிச்சலாக வந்தது. எத்தனையோ பெண்கள், ஆண்கள் நடிக்கிறார்கள். முதலாளியாயும் இருக்கிறார்கள். அவர்களில் ஒருசிலர் எவ்வளவோ கண்ணியமாயும் குடும்பஸ்தர்களின் தோரணைக்குப் பங்கமில்லாமலும் இருக்கிறதையும் சேகர் பார்த்திருப்பதால் அதற்கு விரோதமாயுள்ளவர்களைப் பார்க்கவும் வெறுப்புற்றான்.

சிங்கத்தைக்கண்டு மிரளும் மானைப்போல் மிரண்டு கதிகலங்கித் திக்குமுக்காட வனஜாவும் கிரிஜாவும் இறங்கினார்கள். சாந்தமும் முகத்தில் புன்முறுவலும் குடிகொண்ட லக்ஷ்மியை வனஜா பார்த்ததுதான் தாமதம்...எங்கிருந்தோ அழுகை பீறிக்கொண்டு வந்துவிட்டதால், "அண்ணீ!" என்று ஒரு கதறல் கதறியவாறு, தாயைக்கண்ட கன்றைப்போல், ஓடிவந்து கட்டிக்கொண்டாள்.

லக்ஷ்மியும் மிகப் பொறுமையாயும் அன்பாயும் வனஜாவைச் சேர்த்தணைத்துக்கொண்டு கிரிஜாவையும் மற்றொரு கையால் பிடித்தவாறு தன் காருக்கு வேகமாய் நடந்தாளேயன்றி வேறு எதுவுமே பேசவில்லை. செய்கையினாலும் அணைப்பினாலும் தன்னுடைய அன்பைமட்டும் அள்ளிக்கொட்டிக் காட்டிவிட்டாள்.

சேகரனுக்கிருக்கும் ஆத்திரத்தில் வனஜாவை இத்தனை கும்பல்களின் முன்பு நன்றாகப் புடைத்து மானத்தைக் கக்க வைத்துவிடலாமா? மென்னியைத் திருகிவிடலாமா?....என்னும் ஆவேசம் துள்ளிக்குதித்தது. லக்ஷ்மியின் கண்களின் ஜாடையும் அவளுடைய விலைமதிப்பற்ற குணத்தின் சக்தியும் இவனைக் கட்டுப்படுத்தியது.

கும்பலில் எப்படியோ வந்து காரில் ஏறிவிட்டார்கள். கார்கிளம்பிச் செல்ல வழியின்றிப் பின்னுக்கடித்தும்முன்னுக் கிழுத்தும் ஓட்ட வழி செய்கையில், ஜனங்கள் பலவிதமாகப்

பேசும்பேச்சுக்களை எல்லாம் கேட்டு, லக்ஷ்மி ஆற அமர சாந்தத்துடன், "வனஜா! அதோ அந்த வார்த்தைகளைச் சற்று சாவதானமாகக் கேளு!" என்றாள்.

"சாமிக்குக்கூட பொறுக்கலெ! உலகத்தெ கெடுக்கவந்த பாவி!... பொம்பளெங்கல்லாம் இந்தப் பாழும் சினிமாக்காரியே பாத்துப்பாயாப்பூட்டது சாமிக்குப் பொறுக்குமா? அதான் காலெ ஒடிச்சி கயித்துலெ கட்டிப்புட்டாரு!...செத்தா சனி போச்சு!... இந்தப் பீடைகள் உசிரோடெ இருந்து யாரெ காப்பாத்தணும்னேன்!... ஐயையோ! எங்க மாமாபுள்ளெ சினிமாபயித்தியம்புடிச்சிக்கிட்டு இவஆடாபடம்னு ஓயாமெ போய்ப் பார்த்துபார்த்துத் தானும் சினிமாலெ சேர்ந்து குடும்பத்தையே அழிச்சு பாழாக்கிடான்னு!...பொண்டாட்டி புள்ளெ நடுத்தெருவுலெ நாராயணான்னு அழுது சாவுதுங்க! இந்தப் படுபாவியோடெதான் சுத்திகிண்டு கிடந்தான்!...... ஆமாமாம்! எங்க சொந்தக்காரப் பொண்ணுகூட இதே போலே ஓடிப்போயிடுச்சி. அதெ இப்ப யாருமே சீந்தறது கெடயாது. சினிமாக்காரனும் சரியானபடி கவனிக்காமெ தள்ளிப்புட்டான்! சந்திசிரிச்சுப் போயக்குது! கட்டின புருசன் ஒருபுறம்; பெத்த பொண்ணு ஒருபக்கம்; தன்னெ பெத்த தாயிதகப்பன் ஒருபக்கம்; கெட்டு பாளாபோயிடுத்து! சினிமா ஆடினதுக்குப்பலன் கண்ணியம்போச்சு...கவுரவம் போச்சு... சுத்தத்தார் மதிப்பு போச்சு......கசுமாலமாய் கொயந்தெ குட்டியெ பெத்துகினு திரியுது!...ஆய்யய்ய!......குப்பையான்னு போச்சு...

இப்படிப்பட்ட விமரிசனத்தைக் காதாரக் கேட்கும் பொருட்டு வேண்டுமென்றே வண்டியைவிடாமல் லக்ஷ்மி நிற்கச்செய்தாள். சேகரின் துடிதுடிப்பு குறையவே இல்லை. "நாசகாலீ! மூதேவீ! உன் செய்கையின் பலன் உன்னையும் இத்தகைய குப்பைத் தொட்டியில்தான் தள்ளி நாறச்செய்யப் போகிறது! இப்படி அவமானப்பட்டு மதிப்புக்குலைந்து வாழுவதைவிட நீ செத்துப்போய்விடலாம்!" என்று தன்னிலையழிந்த வேகத்தில் சொல்லிவிட்டான்.

வனஜா விம்மிவிம்மிப் புலம்புவதைத்தவிர அவளுக்கு வேறு எதுவுமே தோன்றவில்லை. இதற்குள் காரும் கிளம்பியது. லக்ஷ்மி ட்ரைவரிடம் காரை மெல்லவே விடச்செய்தாள். சுவர்களில் எல்லாம் சினிமா ராணியின் விளம்பர பொம்மைகள் பலவிதத்தோற்றங்களில் ஒட்டியிருப்பதையும், பெரியபெரிய மரங்களில் உருவங்கள் செய்துவைத்திருப்பதையும், லக்ஷ்மி, வனஜாவுக்குக்காட்டி, "வனஜா! நன்றாகப் பாரம்மா! சுவரொட்டியிலுள்ள நக்ஷத்திரத்தின் முகத்தில் சாணியறைந்திருப்பதையும் கரிபூசியிருப்பதையும் மீசை வைத்திருப்பதையும் கண்ணை நொள்ளைபோல் கிழித்தும் கரி

யாத்தியும் மூக்கைச் சிதைத்தும் வைத்திருப்பதையும் நன்றாகப்பாரு!'' என்று ஒவ்வொரு சினிமாக்காரியின், காரனின், பொம்மைகளைச்செய்துள்ள பரிபவத்தைக்காட்டிப் பேசுவதைக்கண்ட வனஜாவின் தலை சுழன்றது. அவள் சின்னஞ்சிறுமியாயினும் தாங்கமாட்டாத வேதனையும் சங்கடமும் வாட்டிவதைக்கின்றது.. சினிமா நக்ஷத்திரமென்றால் தேவலோக கன்னிகைகள், சொர்க்கவாஸிகள்...என்று எண்ணியிருந்தோமே!...இத்தனை படுமோசமாகவா அவர்களைப் பொதுமக்கள் எண்ணுகிறார்கள்?...என்கிற எண்ணம் இரண்டுமங்கைகளின் உள்ளங்களிலும் எப்படியோ மின்ஸாரம் போல் தாக்கி எழுந்தது!

லக்ஷ்மி தனதுப்ரசாரத்தை விடாமல் மேலும் தொடர்ந்து "வனஜா! கிரிஜா! இன்னும் நன்றாகப்பாருங்கள்! அதோ! வீதியில் பெரியபெரிய வண்டிகளில் தள்ளிக்கொண்டுபோகும் பொம்மைகளின் கண்ணராவியைப் பாருங்கள்; வேண்டுமென்று கிழிக்கத்தகாத இடத்தில் கிழித்து விகாரப்படுத்தியிருக்கிறதோடு அதன் வாயில் சாணி உருண்டையை அறைந்திருக்கும் வயிற்றெரிச்சலைப்பார்த்தபிறகாவது சினிமா நக்ஷத்திரத்திற்குக் கண்ணியவாழ்க்கையில் பொதுமக்களிடையே எத்தகைய மதிப்பு இருக்கிறது என்பதை நன்றாகப் பாருங்கோ!...அதோ! அந்தச் சுவரில் உள்ளபொம்மையின் கீழ் கரியினால்...குடிகெடுக்கும் கொள்ளிவாய்ப் பிசாசே! ஊழல் பிண்டமே! நீயா கற்பரசியின் வேடத்தில் நடிக்கிறாய்?... தூ தூ!...உன்பெற்றோரையும் கணவனையும் அலையவைத்துவிட்டு ஓடிவந்து சந்தி சிரிக்கும் நீயா உத்தமியின் பாத்திரத்தில் புகுந்து பரிமளிக்கப்பார்க்கிறாய்?....பேமானி!...என்று எழுதியிருப்பதைப் பார்த்தாயா?...அதோ வனஜா! நன்றாகப் பாரு! நேற்றிரவு எந்த ஒருசினிமாராஜாவின் புகைப்படத்தை வைத்துக்கொண்டு முன்னும் பின்னும் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தாயோ, அதே மனிதனின் படத்தைப் பாரு! அதனடியில் கரியால் எழுதியுள்ளதையும் பாரு..."டேய்! வேஷக்கார நாயே! கட்டியமனைவியைக் கண்கலங்கத் தவிக்கவிட்டுவிட்டு கண்டகண்டவேசிகளுடன் சுற்றியலையும் பேயே! நீயா உத்தமக்கணவன்?'...என்கிற மிகச்சிறந்த பாத்திரத்தில் வெட்கமின்றி நடிக்கிறாய்?...என்பதை நன்றாகப்படி, வனஜா! நன்றாகப்படி!...அதோ! நேற்றிரவு நீ உன்நிலைமையை மறந்து...சிறுமி என்பதையும் அறவே மறந்து...உன் கண்ணியம், மதிப்பு, குலத்தின் பெருமை, பெரியவர்களின் புகழ், முதலிய சகலத்தையும் மறந்து, எந்த சினிமா ராணிக்குத் துணிந்து கடிதமெழுதினாயோ, அதே ராணியினால் நீ இன்று அடைந்த பரிபவம்...நாய்க்கடியின் விஷம்...நாணயம் கெட்டதின் விபரீதம்...நாளை வீட்டில் நடக்கப்போகும் விசேஷத்தையும்

மறந்து திரிந்தவயிற்றெரிச்சலின் விளைவு—இவை போதுமா? அதோ! அதே உத்திராதேவியாம், தேவி! மூதேவி என்றால் தகும்! அந்தப்பேய் யாரு தெரியுமா? இப்பொழுது உங்களை இந்தப் போராபத்திலிருந்து காப்பாற்றித் தன் பங்களாவில் கொண்டுவைத்துப் பத்திரப்படுத்தி, பின் உன் அண்ணாவுக்குத் தெரிவித்து எங்களை வரவழைத்த உத்தமரின் கைப்பிடித்து அக்னிசாக்ஷியாக மணந்த படுபாவி! அந்த உத்தமரே உன் அண்ணாவின் ஆபீஸ் பெரிய அதிகாரி! அத்தகைய மகத்தான பெருமையை—கவுரவத்தை—உதறித்தள்ளிவிட்டு நாய்போல் அலைய ஓடிவந்த பாதகிக்கு நீ ஏதோ ப்ரமிப்பினால் மிரண்டு போய் கடிதமே எழுதத் துணிந்துவிட்டாயல்லவா? அத்தகைய கொடுமைப்பிண்டத்தின் அநீதச்செய்கையினால் இந்த நிமிஷம் நாங்கள் பிழைத்ததே ட்ரைவரின் சாமர்த்தியம்—கடவுளின் கருணை—(விவரங்களைக்கூறி), ''வனஜா! ஏன் இப்படி விக்கிவிக்கி அழுகிறாய்?... அதோ! உத்திராவின் சுவரொட்டிப்படத்தைப்பாரு!... சாணி உருண்டைகளால்சிங்காரித்திருப்பதையும், கரியினால் மீசை, தாடிவைத்திருப்பதையும், அசங்கியமாய் எழுதியிருப்பதையும் உற்றுப்பார். தெளிந்த மனத்துடன் கலக்கமில்லாத நிலைமையில் கண்ணைத்திறந்து பாரு.

நூற்றுக்குத்தொண்ணூறு பேர் இந்தக்கதியைத்தான் அடைந்து சாகும்போது பாபப்பிண்டங்களாய்க் கண்ணீர் விட்டுக் கலங்கிச்சாகிறார்கள்! எந்தத்தொழிலிலும் உத்தமர்கள் ஒரு சிலர் இல்லாமலில்லை. அவர்களை உலகம் ஒருசிறிது கொண்டாடுகிறது! எது அதிகமோ, அதைத்தானே கண்டு பயப்படவேணும்? ஊரில் அம்மை, காலரா, க்ஷயம் முதலிய ரோகங்கள் எங்கு எங்கு அதிகமாக இருக்கிறதோ, அதைத் தடுக்கச் சர்க்காரும் முனிஸிபாலிட்டியும் பொது ஸ்தாபனங்களும் பாடுபடுகின்றதேயன்றி ஆரோக்யமாயிருப்பவர்களிடம் போகிறார்களா? அவர்களைப் பார்த்து மற்றவர்கள் தெரிந்துகொள்ளவேண்டாமா? அதுபோலத்தான் மற்றது. இத்தனை ப்ரத்யக்ஷப்ரமாணங்களை நேருக்குநேராக உனக்குக் காட்டி உன்னைத் தேற்றவே நான் இப்போது கூடவந்தேன்.... நல்ல இடத்தில் பந்தோபஸ்தாக வைத்திருக்கையில் ஏன் ஓடி விட்டீர்கள்?''... என்று அதட்டலாகவே கேட்டாள்.

வனஜா விக்கிவிக்கி அழுதபடியே, ''அண்ணீ! மதிமோசம் போய்விட்டோம். அங்குள்ளவர் அண்ணாவின் ஆபீஸர் என்பதும் தெரியாது. யாரோ எங்களைக் கூட்டிவந்துவிட்டதாகப் பயந்துவிட்டோம். டெலிபோனில் பேசிய பேச்சுக்களைக் கேட்டு நடுங்கிவிட்டோம். ஐயோ! வீட்டிற்கு எப்படி வருவோம்... அத்தனை பெரிய மனிதரின் மனைவியா உத்ரா தேவி!... அவளாலா நம் காருக்கும் அடி!... என் கடிதத்தை

நீயா எடுத்துப் பதுக்கிவிட்டாய்?...எனக்கு ஏதோ செய்கிறது அண்ணீ!''...என்று பெரிதாக அழுதாள்.

லக்ஷ்மி:—வனஜா! நீ செய்துவிட்ட இந்தக் காரியத்தினால் நம் குடும்ப கண்ணியம் எத்தனை அடிதூரம் பாதாளத்தில் இறங்கிவிட்டது தெரியுமா? இனிமேல் இத்தகைய சிறிய உணர்ச்சிக்கு இதயத்தில் இடங்கொடுக்காதே. ஏதோ நல்ல படமாக இருந்தால் பொழுதுபோக்கிற்குப் போய்ப் பார்க்கவேண்டும் என்று மட்டும் எண்ணவேண்டுமேயன்றி இப்படியா தன் வாழ்வையே பாழாக்கத் துணிவது? இனிமேல் இத்தமாதிரி நீ ஏதாவது அவமானமான காரியத்தைச் செய்யப் புகுந்தால் உடனே நான் தற்கொலை புரிந்துகொண்டு இறப்பதைத் தவிர பிறகு உயிர் வாழமாட்டேன்...

''ஐயையோ! அண்ணீ! அண்ணீ! இதென்ன வார்த்தை? என் புத்தி கலங்கி நாசமாகிவிட்டது. இனி நான் கனவில் கூட இத்தமாதிரி எண்ணமாட்டேன். இது சத்தியம்!... அண்ணு! என்னை மன்னித்துவிடு! அண்ணியின் மகிமை தெரியாது அவர்களைக் கலக்கிவிட்டேன்'' என்று கூறி விக்கி விக்கி மீண்டும் கதறினாள். அழுகையோடு அழுகையாய், ''அண்ணீ! தங்கக் குங்குமச் சிமிழும், சந்தனக் கிண்ணமும் அந்தப் படுபாவி வீட்டில் கொள்ளைபோய்விட்டது. அதைத் திருப்பிக் கேட்டபோது எங்களை அடிக்காத குற்றமாய்ப் பேசித் துரத்தியும், எங்கள் குரங்கு புத்தி மீண்டும் இழுத்துச் சென்று பேராபத்தில் தள்ளியது. அந்த நடிகன்தான் எங்களிடம் உத்திராதேவியின் ஆபத்தைக் கூறி அவளிடம் எங்களை அழைத்துவரும்படி அவளே கூறியதாகக் கூறி அழைத்துச் சென்றான். புத்தி கெட்டு நாங்களும் போய்விட்டோம்...அண்ணீ! எனக்கு மயக்கம் வருவதுபோலிருக்கிறது: ...நாய்க்கடியின் வலி அதிகமாகிறது''...என்று துவண்டு போய் லக்ஷ்மியின்மீது சாய்ந்தாள்.

இத்தனைக்கும் சேகர் வாயே திறக்கவில்லை. அவன் இதயம் ஓரே குழப்பத்தினால் கலங்கியது. கண்களின் ஜ்வாலை மட்டும் வாங்கவேஇல்லை. இதை யறிந்து லக்ஷ்மி, ''ஸ்வாமீ! இனி காரை விடச் சொல்லலாம். முதலில் நாம் உங்கள் எஜமானரிடம் இவர்களை அழைத்துச் செல்லும் விஷயத்தை தெரிவித்துவிட்டுப் பிறகு வீட்டிற்குப் போகலாம்'' என்றாள்.

கார் எஜமானர் வீட்டு வாசலில் நின்றது. கவலை தோய்ந்த முகத்துடன் வாசல் ஹாலிலேயே உட்கார்ந்திருக்கும் பாஸ்கரனிடம் சென்ற சேகரன் சாஷ்டாங்கமாய் அவர் காலில் விழுந்து வணங்கி, ''எனக்குப் பேசவே தெரியவில்லை ஸார்! உங்கள் கீழே ஊழியனாகவிருக்கும் எனக்கு இத்தகைய பேருதவியைச் செய்து காப்பாற்றிய உதாரத்தை நினைத்து

நினைத்து என்னிதயம் உங்கள் திருவடியிலேயே ஐக்யமாகிறது. இதோ! இந்த புத்திகெட்ட நாய்களைக் கொண்டுவந்துவிட்டேன். இனியாவது சரியான வழியில் திருந்திப் பிழைத்தால் பார்க்கிறேன். தவறினால் கொலை பாதகம் வந்தாலும் வரட்டுமென்று கொன்றுபோட்டுவிட்டு நானும் சாகப்போகிறேன்!”

என்று வீராவேசத்துடன் கூறுவதைக் கேட்ட எஜமானர், “சேகர்! ஆத்திரத்திற்கு மட்டும் ஆதிக்கத்தைக் கொடுத்துவிடாதீர்கள்; என் மனது அப்போதிலிருந்து தவிக்கும் தவிப்பைக் கூறவே முடியவில்லை. ஆதியில் நான் நடந்துகொண்ட அசட்டுத்தனத்தின் பலன் என் விதி இப்படியாகிவிட்ட அனுபவத்தைக்கொண்டுதான் உங்களிடம் வலுவில்நானே என்னுடைய வெட்கக்கேடான விஷயத்தைக் கூறி எச்சரிக்கத் துணிந்தேன். இனி புத்தி பிசகி நடக்க மாட்டார்கள் என்றுதான் நினைக்கிறேன்...குழந்தைகளா! நெருப்பு, கண்ணுக்கு ப்ரகாசமாய், அழகாய், செக்கச்செவேலென்று ஜோதியாயிருக்கிறதைப் பார்த்து அதைக் கட்டி மகிழ ஆசைப்பட்டால் என்ன கதி விளையுமோ அதே கதிதான் இதற்கும் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள் என் குமாஸ்தா ஏதோ வைர வ்யாபாரியிடம் வைர நகைகளைப் பற்றிப் பேசுவதைக் கேட்டு நீங்கள் பயந்துபோய் ஓடிவிட்டிருக்கவேணும் அல்லவா! அப்போதுதான் அவர் அந்த விவரத்தைச் சொன்னார்” என்று ஆயாஸத்துடன் பேசினார்.

வனஜாவும் கிரிஜாவும் பெரியாரை வணங்கும்படி லக்ஷ்மி கூறினாள். வணங்கி எழுந்த மங்கைகள் கண்ணீர் பெருக அவமானத்தினால் தம்பித்துப்போனார்கள். வனஜா சிறிது தெளிவுபெற்று, “மாமா! எங்களை க்ஷமிக்கவேண்டும். போராசைத் திரை எங்கள் புத்தியை மறைத்த கொடுமை இத்தனை தூரத்திற்குக் கொண்டுவந்துவிட்டது. என் அண்ணியின் உபதேசம் திரையை அறுத்தெறியச் செய்துவிட்டது. இனி நாங்கள் தப்புவழிக்குப் போகவேமாட்டோம். இன்று பட்ட துன்பமே போதும்”...என்று பேசமுடியாது பேசினாள்.

பாஸ்:—குழந்தைகளே! உங்கள் அண்ணி சாமான்ய மனுஷியல்ல. அவள் குணக் குன்று! குடும்ப விளக்கு இல்லத்தின் இனிய ராணி! மிஸ்டர் சேகர்! என்னை இன்னாரென்று லக்ஷ்மிக்குத் தெரியக் காரணமே இல்லை. அதை நான் தெரிவிக்காமலே இருக்க எண்ணினேன். ஆனால் என்னையவள் அன்னியனாகவே எண்ணிப்பேசாமல் மரியாதைசெலுத்தும் முறையில் தூர விலகிவிடுவதைக் கண்டு நானே வலிய என்னுடைய சொந்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்...

என்பதைக் கேட்டதும் சேகரும் லக்ஷ்மியும் வியப்படைந்து அவர் முகத்தையே உற்றுப் பார்த்தார்கள். அந்தக் குறிப்பையறிந்த பாஸ்கரன், “அம்மா! லக்ஷ்மீ! நான் உன்

கணவனின் மேல் அதிகாரி என்கிற பந்தம் ஏற்படுவதற்கு முன்பே உன்னுடைய சிறிய தகப்பனர் நான் என்பதை உன் பெற்றோர்கள்கூட மறந்திருக்கலாம். மகா உத்தமியாய் உயிர் துறந்த ஸாரதா வேறு யாருமில்லை. உன் தாயுடன் பிறந்த உத்தம சகோதரி! அவளை உயிருடன் கொலைசெய்து விட்ட கொலைபாதகன் நான்தான் என்கிற மகத்தானத்வேஷத்தில் உன்பெற்றோர்கள் என்னைப் பரம விரோதியாகமதித்து உறவையே விட்டுவிட்டார்கள். நானும் அப்போது அகம்பாவம் பிடித்த கர்வியாய் மேனாட்டு மோகத்தீயில் குளித்து சகலமும் மறந்துபோய் மனிதத்தன்மையற்ற ம்ருகமாயிருந்ததால் ஒருவரையுமே மதிக்காமல் முரடனாயிருந்துவிட்டேன். பின்னர் உண்டாகிய அவமானத்தினால் ஊரையேவிட்டுக் கண்மறையச் சென்றேன். பிறகு மனிதர்கள் முகத்தில் விழிக்கவும் மனமின்றி நானே துறவிபோலாகி தூரவிலகிவிட்டேன். உமது திருமண அழைப்புத்தாளைக் கண்டதும் லக்ஷ்மி எனக்கு மகளாகும் முறையை உடையவள் என்பதை அதன் மூலம் அறிந்ததும் என்னையறியாத ஒரு உணர்ச்சி தூண்டியது. மகா உத்தமியான ஸாரதாவின் கதி இவளுக்கு வாராதிருக்கும் பொருட்டே நான் வலுவில் உங்களிடம் இச்செய்திகளை மறைத்துத் தெரிவித்தேன். லக்ஷமியைப் பார்த்துப் பேசும் உரிமை எனக்கிருப்பதை நான் கைவிட மனமின்றி என்னை மீறிய உணர்ச்சியினால் மறைந்துபோனஉறவை மீண்டும் தெரிவித்துவிட்டேன்''...என்று முடிப்பதற்குள், சேகரனின் கண் ஜாடையை அறிந்த லக்ஷ்மி, ''சித்தப்பா!'' என்று தேன் ஒழுக அழைத்தபடி அவர்காலில் விழுந்துவணங்கி எழுந்தாள். அவள் உள்ளத்தின் பல்வேறு உணர்ச்சிகளின் ஸாரம் கண்ணீராகப் பெருகியது. தன் தாயார் தனக்கொரு சகோதரி இம்மாதிரி இருந்து மறைந்த விஷயத்தையே சொல்லவில்லையே! எதனால் சொல்லாமல் மறைத்திருக்கவேண்டும்!... இவர் சொல்வது உண்மையாயிருக்குமா?...என்கிற ஒரு குட்டிச் சந்தேகம் புகுந்துகொண்டு இதயத்தைக் கலக்கியது.

---

## 19

கல்யாண வீட்டிற்கு ஏற்கெனவே வந்துள்ளவர்களுக்கு விஷயம் இன்னதென்று விவரமாகப் புரியவில்லை எனினும் காலையில் போனபெண்கள் இன்னும் வராத காரணம் தெரியவில்லை. குசமச பேச்சுக்களும் டெலிபோன் ரகஸியங்களும் ஏதோ நடக்கின்றன. அடுத்தாற்போல் எல்லோரும் ஒரே மட்டாக வெளியே போயிருப்பதிலிருந்து ஏதோ ரகஸியம் கட்டாயம் நடந்திருக்கவேண்டும்; மூடி மறைத்துச் சாக்குப்

போக்குகள் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள்; என்னவாக இருக்கும்?...என்று தமக்குள் யோசிப்பவர்களும்...மற்றவர்களிடம் பேசிச் சந்தேகிக்கின்றவர்களும், சமயல்காரனிடம்... வேலைக்காரனிடம்...கேட்கிறவர்களுமாக அமர்க்களப்படுகிறது.

மணியோ ஏறிக்கொண்டே இருப்பதுபோல சந்தேகமும் ஜன்னி ஏறுவதுபோல் ஏறிக்கொண்டு வருகிறது! சிலருடைய சுபாவம் டெலிபோன் இருக்கும் வீடுகளுக்குச் சென்றால் தலைப் பொறியாய்த் தமக்குத் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் யாராக இருப்பினும் டெலிபோன் செய்து மணிக்கணக்கில் வீண் அரட்டையுடன் பேசுவது வழக்கம்! அதுபோல் இங்குள்ள சிலரும் தமக்குத் தெரிந்தவர்களிடம் பேசி இது சம்மந்தமான விஷயத்தையறியத் துடிதுடிக்கிறார்கள். சிலர் சம்மந்தாசம்மந்தமில்லாத நிலைமையில் பேசியும் பார்த்தார்கள்.

அதே சமயம் மீனாக்ஷியும் அவள் கணவரும்மட்டும் வந்து சேர்ந்தார்கள். இவர்களை நேரடியாய்க் கேட்டுச் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள முடியவில்லை எனினும் ஒருவாறு தமது ஆவலை யடக்கமாட்டாது, "மீனாக்ஷி! காலை முதல் நீ சாப்பிடாமல் இம்மாதிரி அலைந்துகொண்டே இருந்தால் நாங்கள் மட்டும் சாப்பிட மனது பிடிக்குமா? காலையில் சென்ற பெண்கள் இன்னும் வரவில்லை. மத்தியில் வந்து ஒருவாய் சாப்பிட்டுவிட்டுப் போயிருக்கக்கூடாதோ?" என்று தாங்களே பீடிகை போட்டுக் கேட்டார்கள்.

"சொந்தக்காரர்களுடைய வீடுகளுக்கும் சிநேகிதர்களுடைய வீட்டிற்கும் போனால் 'சாப்பிடாமல் விட்டு விடுவார்களா? அவர்கள் எங்காவது சாப்பிட்டுத்தானிருப்பார்கள். நீங்கள் வாருங்கள்!" என்று சிலர் சுதந்திரமாகக் கூப்பிட்டார்கள்.

இதையே ஒரு முக்ய சந்தர்ப்பமாக எண்ணிய மீனாக்ஷியின் கணவர், "ஏதோ இன்று போதாத காலத்தின் பலன், 'தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் நின்றது' என்பது போலாயிற்று. நாளைய தினம் விருந்து நடக்குமா நடக்காதா என்கிற சந்தேகமே உண்டாகி அலையவைத்துவிட்டது... தலைகிறுக்குப் பிடித்த ட்ரைவர் ஒருவன் காரைவேகமாக ஓட்டி நம் கார்மீது இடித்து விபத்தை உண்டாக்கியதுமன்றியில் அந்தக் காரில் இரண்டு வேட்டைநாய்கள் இருந்ததாம்! அந்த சனீச்வரன்கள் இந்தப் பெண்களைக் கடித்துவிட்டதாம்!... இந்தச் செய்தியைக் கேட்டு நடுநடுங்கி மூலைக்கொருவராகப் போய்ப் பார்த்து ஆஸ்பத்திரிக்குக்கொண்டுபோய் வைத்தியம் செய்துகொண்டு வருவதற்கு இத்தனை நேரமாகிவிட்டது. நீங்கள் எல்லோரும் எங்கே கவலைப்படப்போகிறீர்களோ? என்று நானும் மீனாவும் பயந்து நடுங்கி முன்னதாக வந்தோம்.

சேகரனும் லக்ஷ்மியும் அவர்களை அழைத்து வருவார்கள்" என்று லக்ஷ்மி முன்னெச்சரிக்கையாய்ச் சொல்லிக்கொடுத்திருந்த பாடத்தை தைரியமாய்ச் சொன்னார்.

மீனாக்ஷிக்கு எதுவுமே பேசத் தெரியாமல் துக்கமும் கவலையும் தொண்டையை அடைக்கத் தன் தனியறையில் போய் உட்கார்ந்தாள். நவநாகரீக மோகத்திலும் ஸினிமாப் பயித்தியத்திலும் மூழ்கிக்கிடந்த மீனாக்ஷி தானும் தன்மகளும் தடபுடல் அலங்காரத்துடன், நாகரீக உடைகளையணிந்து பல புகைப்படங்கள் பிடித்து அந்த அறையில் மாட்டிக்கொண்டிருந்தாள். அதைத்தவிர சினிமாராணிகள், ராஜாக்கள், நடனராணிகள், குமாரிகள் முதலியவர்களின் புகைப்படங்களை ப்ரயாஸைப்பட்டுச் சேகரித்து பெரிய கண்ணாடிபோட்டு கம்பீரமாய் மாட்டியிருந்தாள்.

சாதாரண குடும்ப ராணியின் அலங்காரத்துடனும் கலங்கித் தவிக்கும் குழப்பத்துடனும் உட்கார்ந்திருக்கையில் மேல் குறித்த படங்கள் மீனாக்ஷியைப் பார்த்துக் கண்ணைச்சிமிட்டி ஏளனமாகப்பார்த்து நகைப்பதுபோன்ற ஒரு புதிய தோற்றத்தைக்கண்ட மீனாக்ஷிக்குச் சடக்கென்று இதயத்தில் எங்கிருந்தோ ஒரு உணர்ச்சி பொங்கி வேகமாக எழுந்து பெரும் புயல்காற்றுப்போன்ற ஆவேசத்தை உண்டாக்கியதும், தடதடவென்று எழுந்து நறநறவென்று பல்லைக்கடித்தவாறு அந்தப் படங்களை எல்லாம் கழற்றிச் சுக்கல் நூறாக உடைத்துவிட்டுப் பெரிதாகச் சிரித்துக்கொண்டு நின்றாள். இதைத் தூரவிருந்து பார்த்த அவள் கணவர் திடுக்கிட்டுப்போய் நின்றுவிட்டார். அவர் மனத்தில் எண்ணாத எண்ணங்களெல்லாம் அலைபோல் புரண்டெழுந்தன! இதைப் பிறர் பார்த்துவிட்டால் என்ன நினைப்பார்கள்? திடீரென்று இவ்வாறு மீனாக்ஷியின் செய்கையும் சிரிப்பும் கண்டு கட்டாயம் பயித்தியந்தான் பிடித்துவிட்டது என்று நிச்சயித்துவிடுவார்களே! இதென்ன செய்கை? உண்மையில் நானே சந்தேகப்படும்போது பிறர் நினைப்பதற்குக் கேட்கவேண்டுமா! மீனாக்ஷியின் குணம் உண்மையில் இத்தகைய மாறுதலையடைந்து திரிந்துவிட்டிருக்குமாயின் அதைவிடச் சந்தோஷம் எனக்கு வேறு எதுவுமே இல்லை. க்ருகலக்ஷ்மியாய் குணக்குன்றாய் வாய்த்துள்ள மருமகளின் கால் ராசியின் மகிமைதான் விடிவுகாலம் வந்துவிட்டது என்று நினைக்கலாம்...என்று தனக்குள் ஏதேதோ எண்ணியபடியே மீனாக்ஷியின் அருகில் சென்று "மீனா! இதென்ன செய்கை? இதென்ன சிரிப்பு? என்ன காரணம் பற்றி இவைகளை உடைத்தெறிந்துவிட்டாய்? நீ சரியான தெளிந்த புத்தியுடன்தான் செய்திருக்கிறாயா? அல்லது...

என்று முடிப்பதற்குள் மீனாக்ஷி, இதுவரையில் செய்திராதபடி தன் கணவரின் காலில் விழுந்து வணங்கி, "ஸ்வாமீ! நான் மிகமிகத் தெளிந்த புத்தியுடன்தான் இதைச் செய்தேனேயன்றி எனக்குப் பயித்தியம்பிடித்துவிடவில்லை. என்னுடைய அறியாமையை—நாகரீக மோகத்தை—சினிமாப் பயித்தியத்தை—வேரோடு களைந்தெறிந்துவிட்டு என்வாழ்வில் புனர்ஜென்மத்தை உண்டாக்கிக் கொண்டுவிட்டேன். பழைய மீனாக்ஷி செத்துச் சாம்பலாகிவிட்டாள். ஒவ்வொரு விஷயத்திலும் உங்களுடைய மனத்திற்குப் பிடிக்காத முறையில் என் மனம் 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்கிறபடி அலைந்துத்திரிந்து உங்கள் மனத்தைப் புண்ணாக்கிவிட்டது. என் கண்ணைப் பகவான் இப்போதுதான் திறந்துவிட்டிருக்கிறான். இனிமேல் நான் பழையமாதிரி நடக்கமாட்டேன்... மன்னித்துவிடுங்கள்!" என்று கூறியபடியே கண்ணீர் விட்டாள்.

உண்மையில் அவளுடைய மாறுதலைக்கண்டு தம்பித்துவிட்ட அவள் கணவரின் மனத்தில் இலை கொள்ளாத வியப்புப் பொங்கி எழுந்தது. இவர் பதில் பேசுவதற்குள் இன்னும் ஆங்காங்கு மாட்டப்பட்டிருந்த சில படங்களை எல்லாம் எடுத்து மீனாக்ஷி ஆத்திரம்தீர, டபார் டிபார் என்றுபோட்டு உடைத்தபடி, "சாவுங்கள்!..செத்து சுண்ணும்பாகிவிடுங்கள்!" ...என்று கூறும்போது, கல்யாணத்திற்கு வந்திருப்பவர்களில் சில பெண்கள், இந்தச் சத்தத்தைச்கேட்டு ஓடிவந்து ஜன்னலால் எட்டிப்பார்த்து, "ஐயையோ! திடீரென்று மீனாக்ஷிக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதே! இதென்ன கோராமை! இவளுடைய நிலைமையைக் கண்டு அவர் கதிகலங்கித்தவித்து, நின்றுவிட்டாரே! வீட்டில் சேகரனையும் காணவில்லை! சுவரில் மாட்டியிருந்த படங்களை உடைக்கும் இவள் வெளியில்வந்து நம்மை எல்லாம் மண்டையை உடைத்துவிட்டால் என்ன செய்வது! உள்ளே இருக்கும் அவருக்கும் ஆபத்துச் சமீபித்துவிட்டதே! என்று கத்தினார்கள். உடனே நெருங்கிய உறவினரான ஒருவர் ஓடிவந்து மீனாக்ஷியின் கணவரே ப்ரமிக்கும்படி அவரைத் தரதரவென்று வெளியில் இழுத்துவந்து கதவைத் தாளிட்டுவிட்டான். இதைக் கண்ட மீனாக்ஷி முன்னிலும் பதின்மடங்காக இடிஇடிப்பதுபோலச் சிரித்தாள். இச்சிரிப்பின் ஒலி அந்த வீடு பூராவும் ரீங்காரம் செய்தது!

183182

# மஹாத்மாஜி ஸேவா சங்கம் (Regd.)

**66 வடக்குக் குளக்கரை வீதி, திருவல்லிக்கேணி**

விடுமுறைக்குப் பிறகு நர்ஸரி வகுப்பும் E. S. L. C. வகுப்பும் முறையே சிறப்பாக நடக்கிறது. ப்ரதி வெள்ளிக்கிழமை, ஏகாதசி தினங்களில் பஜனையும் ரோகிணியில் கீதா பாராயணமும் பூர நக்ஷத்திரத்தன்று திருப்பாவை இசையும் நடக்கிறது. ஜுலை மீ 10, 11 தேதிகளில் லக்கி டிப்பு—அதிருஷ்டப் போட்டி விளையாட்டு—மிகமிக உத்ஸாகமாக நடந்தது. சிறிய குழந்தை முதல் பெரியவர்கள் வரையில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

த்யாகமூர்த்தியான காந்தியடிகளின் ஞாபகார்த்த ஸ்தூபி, மணிமண்டப கைங்கர்யத்திற்கு சங்கத்தின் அங்கத்தினர்கள் சிலர் சேர்ந்து 101 ரூபாய் வஸூலித்து 16 உ யன்று கலா மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் தென்னாட்டுக் காந்தி எனப் போற்றப்படும் ஸ்ரீ ராஜாஜி யவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த கைங்கர்யத்திற்கு ஏற்கெனவே கொடுக்காதிருக்கும் சகோதரிகள் தயவுசெய்து சக்தியானுஸாரம் காணிக்கையைச் சமர்ப்பிக்கும் மூலம் நம் கடமையைச் செலுத்திப் பயன் பெறக் கோருகிறேன்.

நிற்க, வருஷா வருஷம் நடப்பதுபோல் இவ்வாண்டில் 6—8—54 மாலை, பொருள் காட்சியை, பேனா சக்ரவர்த்தி ஸ்ரீ கல்கி அவர்கள் அன்புடன் திறந்துவைக்க இசைந்திருக்கிறார். அவ்வமயம் போலீஸ் கமிஷனர் ஸ்ரீ எஸ். பார்த்தஸாரதி ஐயங்கார் அவர்கள் மகிழ்ச்சியுடன் தலைமை தாங்கி நடத்திக்கொடுத்து, பரீக்ஷையில் தேறிய ஹிந்தி மாணவிகளுக்கு ஸர்டிபிகேட்டும் சென்னைநகருக்கே முதன்மையாகப் பாஸ்செய்துள்ள R. பத்மாவுக்கும், முதல் வகுப்பில் பாஸ்செய்துள்ள இதர மாணவிகளுக்கும் ப்ரத்யேகப் பரிசுகளும் வழங்கி, ஆசி கூறுவார். ஆடி வெள்ளிக்கிழமை உத்ஸவமும் பாட்டும் வழக்கப்படி நடக்கிறது.

[எக்சிபிஷன் விழாவுக்குப் பிறகு அக்டோபர் மாதத்தில் சங்கத்தின திறமைவாய்ந்த கோஷ்டியார் ''புனிதபவனம்'' என்கிற வை. மு. கோ. வின் 110-வது நாவலை நாடகமாக நடித்து, சங்கத்தின கட்டிட நிதிக்காக உதவியளிப்பார்கள். சங்கத்து அங்கத்தினர்களுக்கும் மற்ற சகோதரிகளுக்கும் பெருவிருந்தாக இருக்கும்.)

❋

---

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAI-NAYAKI AMMAL is printed & published by V.M.PARTHA SARATHY at the JaganMohini Press, 26, Car St., Triplicane, Madras 5.

